பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை 17.09.2023 கதிர் 310

# லிபியா, சிரியா போன்ற நிலை இங்கும் உருவாகும்

## பெரமுனவின் சட்டத்தரணி மொஹான் சமரநாயக்க தெரிவிப்பு

இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்கும் தலைவர்கள் பதவியில் இருப்பதை சர்வதேச நாடுகள் விரும்புவதில்லை. இந்த நிலமைநீடித்தால்இலங்கையிலும் ஹைட்டி, லிபியா, சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகள் உருவாகுவதற்கஷ்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன இவ்வாறு பேராசிரியர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுவின் சட்டத்தரணிகள்சங்கத்தின்கூட்டம் நேற்றுநடைபெற்றது.அங்குகலந்து கொண்டுஉரையாற்றும்போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

☞2

# இது ரகசியம் அல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று கொஞ்ச நாளைக்கு முன்னர் தமிழ்நாட்டில் அரசியல் தலைவர் பழ. நெடுமாறன் அறிவித்தார். அவரது இந்த அறிவிப்பு திடீர் பரபரப்பைக்கிளப்பியது. பின்னர்அது பற்றிய கேள்விகளுக்கு, பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பதைச் சொல்லச் சொன்னார்கள், அதனால் சொன்னேன், விரைவில் அவர் வெளியே வந்து போராட்டத்தைத் தொடர்வார்என்றார்பழநெடுமாறன்.

புலம்பெயர் நாடுகளில் தலைவர் பிரபாகரனின் மகள் என்று கூறி ஒருவரைஅறிமுகப்படுத்திகாசுசேர்க்க முயற்சித்தார்கள். ஆனால், அந்தப் பெண்ணிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அவர்

☞2

# புதிய சுதந்திரப் போராட்டத்தை தொடங்கவேண்டும் - அநுர

நாடு இந்தியாவுக்கு கூறுபோட்டு விற்கப்படுவதாகத் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, நாட்டை மீட்க புதிய சுதந்திரப் போராட்டத்தைத் தொடக்கவேண்டும்என்றுதெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மாவட்ட அதிகார சபைக்கான

☞2

# அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அழைப்பு

## அஷ்ரப்புக்குச் செய்யும் அஞ்சலி அதுவே என்கிறார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சியிலிருந்து வெளியேறியும்பிரிந்தும் நிற்பவர்கள் அனைவரையும்தாய்க்கட்சிக்கு அழைக்கவேண்டும். அவர்கள் ஒருநாள் மீண்டும் வந்து எமது பாசறைக்குள் செயற்படும் நிலமையை உருவாக்கவேண்டும். எம்மை விமர்சிப்பவர்களைத் திருப்பி விமர்சிக்க வேண்டியதில்லை. அதுதான் எமதுதலைவருக்கு

☞2

# வெறும் 70 மில். டொலருக்காக நாடு வங்குரோத்தடைந்தாகக் கூறமுடியாது

## ஐ.தேகட்சி எம்.பி. வஜிர சாட்சியம்

70 பில்லியன் டொலருக்காக நாடு வங்குரோத்து அடைந்ததாகக் கூறமுடியாது. ஆகவே இந்தவிடயம்சம்பந்தமாக அரச புலனாய்வுப் பிரிவினரும் கவனம் செலுத்தவேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணத்தை கண்டறிவதுதொடர்பில்அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழுவின் முன்னிலையில் வெள்ளிக்கிழமை

☞2



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தவறாகப் பதிலளித்ததன் மூலம்அவர்துவாரகாஇல்லை என்பது தெரியவந்தது. பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்கிற கதை நிதி சேகரிப்பதற்கான ஒரு உத்தியாக இருக்கும் என்று ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம்சித்தார்த்தன்ஒரு விளக்கம் கொடுத்திருந்தார்.

இப்படித் ''தலைவர் உயிருடன் இருக்கிறார், அவர் மகள் இருக்கிறார், மனைவியும் இருக்கிறார். விரைவில் அவர்கள் போராட்டத்தைத் தொடர வருவார்கள்"என்கிறகதைகள் கடந்த 14 வருடங்களில் பல தடவைகள் வந்து சென்றுள்ளன. ஆனால்அந்த அறிவிப்புக்கள் வெளியாகி நீண்டநாள்களின்பின்னரும் எதுவும் நடந்தது இல்லை என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில் இப்போது ஒரு புதுக் கதை கிளம்பியுள்ளது. இந்திய ஊடகம் ஒன்று இந்தக் கதையைக் கிளப்பியுள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரனது மகள் துவரகாவும்அவரது கணவர் தயாபர ராஜ் என்பவரும் தமிழ்நாடு, மண்டபம் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் இருந்து படகு மூலம் இலங்கைக்குத் தப்பிச் சென்றிருக்கிறார்கள்என்கிறது அந்தச் செய்தி.

மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து தப்பிச் சென்ற இலங்கைத் தம்பதியர் இருவரும் ஏற்கனவே தமிழ்நாடு புலனாய்வு அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இருந்தவர்கள். எனினும் அவர்கள் பிரபாகரனின் மகள் மற்றும் மருமகன் என்பது புலனாய்வுஅதிகாரிகளுக்குத் தெரியாது. விடுதலைப்புலிகள் இயக்கபுலனாய்வுப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இவர்கள் இருவரும் இருக்கக்கூடும் என்கிற வகையில் அவர்கள் கண்காணிக்கப்பட்டு வந்தனர். திடீரென அவர்கள் இருவரும் முகாமில் இருந்து காணாமல் போய்விட்டனர்.

இந்தியப் புலனாய்வாளர்களின் கண்காணிப்பில் இருந்த தென்கொரியர் ஒருவரும் பல்கேரியர் ஒருவரும் தப்பிச் சென்ற பின்னரே இந்த இருவரும் மண்டபம் அகதி முகாமில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர் என்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர் என்று அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா என்று கூறும் காணொலி ஒன்று இலங்கையில்சமூகவலைத் தளங்கள் ஊடாகப் பரவத் தொடங்கிய பின்னரே, தமது கண்காணிப்பில் இருந்த இருவர் மண்டபம் அகதி முகாமில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்பதை தமிழ்நாடுகாவல்துறையினர் கண்டுபிடித்தனர் என்றும் அந்தச்செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தயாபர ராஜ் மற்றும் அவரது மனைவி உதயகலா என்கிற பெயரில் அவர்கள் மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்துள்ளார்கள்.

2016ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தயாபர ராஜ், ராமநாதபுரம் மண்டபத்தில் உள்ள சிறப்பு தனிமைப்படுத்தப்பட்ட முகாமில் தனது குடும்பத்தினரை சட்டவிரோதமாக அடைத்து வைத்திருக்கின்றனர் என்று கூறி காலவரையற்ற பட்டினிப் போராட்டம் நடத்தினார். அவரது கோரிக்கையை அடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு இன்டர்போலால் தேடப்பட்டு வரும் ராஜை முழு நேரக் கண்காணிப்பு இன்றி மண்டபம் முகாமுக்கு மாற்றுமாறு அரசுக்கு உத்தர விட்டது.

''இருவரும் வருவாய்த் துறையின் கண்காணிப்பில் மண்டபத்தில் இருந்திருக்க வேண்டும். ஆனால் உதயகலாவின் வீடியோ ஒன்று தற்போது வெளியாகியுள்ளது. அந்த வீடியோவில் அவர் மறைந்த விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா என வர்ணிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் அவர் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கியிருப்பது போல் தெரிகிறது" தமிழ்நாடு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர் என்று டிடி நெக்ஸ்ட் என்கிற ஊடகம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

தம்பதியினர்தங்கள்மூன்று குழந்தைகளுடன் மண்டபம் முகாமில் இருந்து சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சட்டவிரோத படகில் தங்கள் சொந்த ஊருக்கு ரகசியமாக வெளியேறியதாக அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

இந்தச் செய்தி எந்தளவு தூரம் உண்மையானது என்பது தெரியவில்லை. ஆனால் துவாரகா தொடர்பில் இதற்கு முன்னர் வந்த செய்திகள் எல்லாவற்றோடும் முரண்பட்ட வகையில் இந்தச் செய்தி வந்திருக்கின்றது. இதற்கு முன்னர் எல்லாம் துவாரகா வெளிநாடு ஒன்றில் வாழ்கின்றார் என்றே சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இந்தச் செய்தியோ அவர் இலங்கையில் இருக்கிறார் என்கிறது.

இப்படி இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் அந்தத் தலைவனின் பெயரிலேயே காலத்தைக்கடத்தப்போகிறார்களோ தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## லிபியா,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகின் பலம் பொருந்தியவர்களுக்கு இலங்கையைத் தமது அதிகாரத்துக்குள் வைத்துக்கொள்வது அவசியம். அவர்கள் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் அவர்களுக்கு இசைந்து கொடுக்கும் நிர்வாகம் எமது நாட்டில் இருக்கவேண்டும். அதாவது அவர்கள் கூறுவதற்கு தலையசைக்கும் ஆட்சியாளர்கள் நாட்டில் ஆட்சியை நடத்த வேண்டும்.

எமது தேசம் தொடர்பில் சிந்தித்து ஆட்சியை முன்னெடுக்கின்ற தலைவர்களை அவர்கள் விரும்புவதில்லை. குறிப்பாக இலங்கையில் இறையாண்மையை பாதுகாக்கின்ற ஆட்சியாளர்கள் பதவியில் இருப்பதை சர்வதேசநாடுகள் விரும்புவதில்லை.

கடந்தகாலத்தில்நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தின் பின்னாலும்பூகோளஅரசியல் சக்திகளே காணப்பட்டன. உலக நிதி நிர்வாகத்தினால் எமது நாடு ஆளப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் நிலைமை நீடித்தால் அதன் முடிவு மிக மோசமானதாக இருக்கும் கவலைகளை ஏற்படுத்துவதாக இருக்கும். ஹைட்டி, லிபியா, சிரியா, ஈராக்போன்ற நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகள் இங்கும் உருவாகுவதற்கே அதிகமான வாய்ப்புகள் உள்ளன - என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின்போது, யாழ்ப்பாணத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக யாழ். நூலகத்தை எரித்து வாக்குபெட்டிகளை ஜே.ஆர். ஜயவர்தன நிரப்பிக்கொண்டார்.

காமினி ஜயவிக்கிரம பெரேரா என்ற பொலிஸ் அதிகாரியே இந்தச்செயலை வழிநடத்தியுள்ளார்.

அதன்பின்னர் கறுப்பு ஜூலை அரங்கேற்றப்பட்டது. இலங்கை வரலாற்றில் இதுதான் கறுப்பு பக்கம். என்றுமே நியாயப்படுத்த முடியாத கொடூரம். இவ்வாறான அவலங்களால்தான் ஆயுத போராட்டம் உருவாகி, தற்கொலை போராளிகள்கூட உருவாகினர்.

30 வருட போரில் வடக்கிலும், தெற்கிலும் உயிரிழப்புக்கள் இடம்பெற்றன. வடக்கிலும், தெற்கிலும் படையினர் உள்ளனர். வடக்கில் உள்ள தாய்மார் தமது பிள்ளையின் படத்தை வைத்துக்கொண்டு வீதியில் போராடுகின்றார். தெற்கில் உள்ள தாய்மார், இராணுவ நினைவு தூபிக்கு முன்னால் நின்றுகொண்டு தனது மகனின் பெயரைத் தேடுகின்றார்கள்.

போரால் வடக்குக்கும், தெற்குக்கும் எஞ்சியது என்ன? போர் முடிந்துவிட்டது, நாம் அனைவரும் தோல்வி அடைந்துவிட்டோம். மன்னாரை மீட்பதற்கு கடும் சமர் இடம்பெற்றது. அது தமது மண்ணென வடக்கு இளைஞர்கள் போரிட்டனர். அந்தப் பகுதியைத் தம்முடன் இணைத்துக்கொள்ள தெற்கு இளைஞர்கள் போரிட்டனர். ஆனால் இன்று மன்னாரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் அதானிக்கு வழங்கப்பட்டுள்ளது. 4 ஆயிரம் மெகா வோல்ட் காற்றாலை மின் உற்பத்தி இடம்பெறவுள்ளது.

பூநகரிக்காகவும் கடும் சண்டை இடம்பெற்றது. அந்த இடமும் காற்றாலை மின் உற்பத்திக்கு அதானிக்கு வழங்கப்படவுள்ளது. திருகோணமலையில் பொருளாதார நிலையம் அமைப்பதற்காகவும் இந்தியாவுக்கு இடங்கள் வழங்கப்படவுள்ளன. இந்தியாதான் இன்று இலங்கையின் உரிமையாளராகி விட்டது. துன்பம், வேதனை, கசப்பான வரலாறு என்பனவே எமக்கு எஞ்சியுள்ளன.

வடக்கிலும் இனவாதம் உள்ளது, தெற்கிலும் உள்ளது. அவற்றுக்கு அப்பால் நாம் அனைவரும் இலங்கையர்களாக இணைந்து இன ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு புதிய சுதந்திர போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் -என்றார்.

# தியாகி திலீபனின் ஊர்த்திப் பவனிக்கு கிழக்கில் நேற்றிரவு பெரும் நெருக்கடி

## தாக்குதல் அச்சுறுத்தலால் பயணம் இடைநிறுத்தம்

பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி நேற்றிரவு மட்டக்களப்பு மாவட்டம் வாகரையூடாகத் திருகோணமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது சேருவெல பகுதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியது. அங்கு வைத்து ஊர்திப்பவனி மீது கல்வீசித் தாக்குவதற்கு சிங்களக்காடையர்கள் தயாராகியுள்ளார்கள் என்ற தகவல் கிடைத்த நிலையில் வெருகல்தாண்டிப்பயணிக்க முடியாத நிலையில் ஆபத்தான நிலையில் ஊர்தி வெருகலில் தரித்து நின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர்.

இந்த ஊர்திப் பவனியில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் சட்டத்தரணி காண்டீபன் உட்பட 10 பேர் ஆபத்தான சூழலில் சிக்கிக் கொண்டிருக்கிறாரக்ள் என்ற கட்சியினர் தெரிவித்தனர்.

முன்னதாக இன்று காலையில் களுவாஞ்சிக் குடியில் வணக்க நிகழ்வுகள் ஆரம்பமான இடத்திலிருந்து அரச புலனாய்வாளர்கள் ஊர்தியை பின்தொடர்ந்து கொண்டிருந்தார்கள்.

அவ்வாறுசெல்லும்வழியில் காத்தான்குடியில்ஆர்ப்பாட்டம் நடைபெறுமென தகவல் பரவியது. அப்படியேநடந்தது. களுவாஞ்சிக்குடியிலிருந்து படுவான்கரையூடாக பயணித்த வாகனத்தை உளவுத் துறையினர் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தார்கள்.

அவர்களது சமிக்கையுடன் செயற்பட்ட ஒரு குழுவினர் மொறக்கொட்டான்சேனை இராணுவ முகாமுக்கு அருகாமையில் நின்று சிங்கக் கொடிகளை ஏந்தியவாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டார்கள் அதனைக் கடந்து சென்றபோது வாழைச்சேனை சந்திக்கு அண்மையில் நின்ற ஒரு குழுவினர் பனர்கள் போஸ்டர்களைத் தாங்கியவாறு மாலை 6.30 மணியளவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அவ்விடத்தைக் கடந்து ஊர்தி பயணித்துக் கொண்டிருந்தபோது அதேகுழுவினர் பட்டாரக வாகனமொன்றில் ஏறி ஊர்தியை முந்திச் சென்று நாவலடியிலுள்ள பொலநறுவை-வாகரை - மட்டக்கப்பு சந்தியில் இறங்கி வீதிக்குக் குறுக்காக பனர்கள் போஸ்டர்களை பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அந்த இடத்தைக் கடந்தும் ஊர்தி வாகரை நோக்கிப் பயணித்தபோது குறித்த அதே குழுவினர் அதே வாகனத்தில் ஏறி ஊர்தியை பின்தொடர்ந்தார்கள். ஊர்தி வாகரை மாவீரர் துயிலுமில்லம் முன்பாக தரித்து நின்றபோது ஊர்தியைக் கடந்து சென்றார்கள்.

தொடர்ந்து ஊர்தி திருகோணமலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது சேருவெலவில் காடையர் குழு தாக்குதல் நடாத்தவுள்ளதாக கிடைத்த தகவலின் காரணமாக ஊர்தியும் அதில் பயணித்தவர்களும்அச்சுறுத்தலான நிலையில் வெருகலைத் தாண்டிப் பயணிக்க முடியாதநிலையில்செயற்பாட்டாளர்கள்ஊர்தியுடன்காத்திருக்கிறார்கள். இரவு ஏதும் ஆபத்து ஏற்படுமா என்ற பதற்றம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

## வெறும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சீனாவுக்கு 70 மில்லியன் டொலர்கள் செலுத்த வேண்டியுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் வரையில் அதற்கான காலம் உள்ளது. 2022 இந்தத் தொகையை செலுத்தி இருக்கவேண்டும் இதற்கு மேலதிகமாக 3.5 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டிய நிலைமையும் உள்ளது. கடந்த ஏப்ரல் வரையில் 3.2 பில்லியன் டொலர்கள் செலுத்தப்பட்டிருக்கின்றன.

முன்னதாககடன்களைமீளச் செலுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது, நிதி அமைச்சர் பதவி விலகினார். மத்தியவங்கியின் ஆளுநரும் பதவி விலகினர்.

இதனிடையே வெளிநாட்டிலிருந்து ஆளுநர் ஒருவரை அழைத்து வந்தார்கள். அவர் பதவியை ஏற்றதும் நாடு வங்குரோத்து அடைந்து விட்டதாக அறிவித்தார்.

அவர் பதவியேற்றவுடன் தேவையற்ற கடமையை செய்துள்ளார். ஆகவே அவ்வாறு வங்குரோத்து அறிவிப்பைச் செய்தமைக்கான காரணத்தையும், அதற்கான உண்மையையும் இக்குழு கண்டறிய வேண்டும்.

இந்த நாடு வங்குரோத்து அடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட தருணத்தில் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய பதவிகளில் இருந்த தலைவர்கள் எவ்வாறானவர்கள் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆராய வேண்டியுள்ளது.

அவர்களுடைய குழந்தைகள்நல்லஇடங்களில்இருந்து பயனடைகிறார்களாஎன்பதை கண்டறிய வேண்டும். 70 பில்லியன் டொலருக்காக நாட்டினை வங்குரோத்து அடைந்ததாக கூற முடியாது. ஆகவே இந்த விடயம் சம்பந்தமாக அரசபுலனாய்வுப் பிரிவினரும் கவனம் செலுத்தவேண்டும்.

நூறுவரையிலான மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் தமது கடமைகளை சரியாகச் செய்யாமையினாலேயே இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன். அதே நேரம் நாடு வங்குரோத்து அடைந்துள்ளதாக விடுக்கப்பட்ட அறிவிப்பானது அரசமைப்பை மீறும் செயலாகவே பார்க்கின்றேன் - என்றார்.

## அனைவரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்கிற மாபெரும் அஞ்சலியாக இருக்கும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் 23ஆவது நினைவுதின 'தலைவர் தின' நிகழ்வு நேற்றைய தினம் சாய்ந்தமருதில் நடைபெற்றபோது அதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மறைந்த தலைவர் அஷ்ரப்பினுடைய இழப்பிற்கு பின்னால் இந்த கட்சியை கூறுபோடுவதற்கு எத்தனை பேர் எத்தனித்தார்கள். ஆனால் ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் இன்றும் தாய் கட்சியாக நிலைத்திருக்கின்றது.

அது மாத்திரமல்ல சர்வதேச சமூகமும், தேசிய அரசியல் தலைமைகளும் முஸ்லிம் மக்களுடைய அதிகளவு ஆணையை ஆதரவைப் பெற்ற இயக்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்என்றகௌரவத்தைஅதிக உச்சமாகஎமக்குவழங்குகின்றார்கள்.

இந்த கௌரவத்தை தக்க வைத்துக் கொண்டிருப்பது மாத்திரம்எமது இயக்கத்திற்கு பெருமையான விடயமல்ல. யாரெல்லாம் எமது அணிக்கு வெளியே இருக்கிறார்களோ அவர்கள் எல்லோரையும் எமது தாய் கட்சிக்கு அழைக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

அவர்கள் ஒரு நாள் எமது பாசறைக்குள் வந்து செயற்பட வேண்டும் என்கின்ற நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். அதுதான் எமது தலைவருக்கு செய்கிற மாபெரும் அஞ்சலியாக இருக்கும்.

அதனை விடுத்து நமது பாசறையை விட்டு வெளியே நிற்கின்றவர்களை நாம் விமர்சிப்பதும் முரண்படுவதும் பொருத்தமானது அல்ல. எம்மை விமர்சிப்பவர்களை, சிறுமைப்படுத்துபவர்களை, குற்றஞ்சாட்டுபவர்களைபற்றி நாம் பேசுவது கிடையாது.

எமது கட்சியைச் சீரழித்து, மலினப்படுத்த நினைப்பவர்களுக்கு எமது போராளிகள் உறுதியாக நிற்கின்றவரையில் அந்த கூறுபோடும் செயற்பாடு முடியாது என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

# புதிய பிரதி செயலாளர் நாயகம் நாடாளுமன்றத்தில் நியமனம்

நாடாளுமன்றத்திற்குபுதிய பிரதி செயலாளர் நாயகமாக சட்டத்தரணி சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அனுபவமிக்க நிர்வாக அதிகாரியான சட்டத்தரணி சமிந்த குலரத்னவை புதிய பிரதி செயலாளர் நாயகமாக நியமித்துள்ளார்.

சமிந்த குலரத்ன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் மேலதிக செயலாளராகவும், பிரதமரின் செயலாளர் மற்றும் அரசாங்கத்தின் தலைமை கொறடாவின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன், லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலத்தின் ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், ருவன்வெல்ல ராஜசிங்கமத்தியகல்லூரியின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்தின் பக்கிங்ஹாம்ஷயர்பல்கலைக் கழகங்களில் வணிக மேலாண்மை மற்றும் நிர்வாகத் துறையில் பட்டம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பத்திரிகையாளர்கள் பிள்ளைகளுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள்

## விண்ணப்பங்களை அனுப்புங்கள்

இலங்கை பத்திரிகை பேரவையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரோக்கியமான ஊடகவியல் மற்றும் பத்திரிகையாளர்களின் நலன்புரிவாழ்வியலைஉயர்த்தும் சபையின் நோக்கத்துக்கு அமைவாகவும் இரண்டாவது தடவை-யாகவும் இலவச பாடசாலை உபகரணங்களை ஊடகவி-யலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கதீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளின் நலன்புரி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் ஊடக சேவையை முன்னெடுக்கும் ஊடகவி-யலாளர்களுக்கு தொழில்துறை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சந்தர்ப்பங்களை உருவாக்குவது இலங்கை பத்திரிகை பேரவையின் நோக்கமாக உள்ளது.

குறித்த இலவச உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

விண்ணப்பத்தை சமர்ப்பித்தல், (ஊடகவியலாளர் (ஆண், பெண்), பெயர், முகவரி தேசிய அடையாள அட்டை இலக்கம், தொழில் செய்யும் பத்திரிகை நிறுவனம், பணியாற்றிவரும் காலம், பிள்ளையின் பெயர், தரம், பாடசாலையின் பெயர் உட்பட விவரங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கிராமசேவைஉத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட்ட மாதாந்த வருமான அறிக்கை மற்றும் முகவரியை உறுதி செய்யும் சான்றிதழ்.

அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள ஊடக அடையாள அட்டை அல்லது பணியாற்றி வரும் நிறுவனத்தால் சேவை காலத்தை உறுதிப்படுத்தும் வகையில் வழங்கப்படும் சான்றிதழின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதற்கமைய மேலே குறிப்பிட்டுள்ள விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டு 2023-9- 26 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

(தபால்உறையின்இடப்பக்கத்தின் மேல் மூலையில் ' பத்திரிகை ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைத்தல்' என்று குறிப்பிட வேண்டும்.

**பேரவை ஆணையாளர்,**
**இலங்கை பத்திரிகை பேரவை**
**155/15 காசல் வீதி பொரளை**
**கொழும்பு - 8**
**தொலைபேசி இலக்கம்-0112693273 / 0112693274**
**என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

(05)

# போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர்பணிஇடைநிறுத்தம்செய்-யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் போதைப்பொருள் பயன்படுத்தினார் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, ஹெரோயின் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தியமை உறுதியான பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சட்ட வைத்தியரிடம் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் பணி நிறுத்தம் வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது. (05)

# காலி வீதிக்குவந்த வட்டி சண்டை இருவர் காயம்; 12 பேர் கைது

காலி வீதியின் போக்குவரத்தைப் பாதிக்கும் வகையில் இடையூறை ஏற்படுத்தி தாக்குதலில் ஈடுபட்ட 12 பேர் கைது செய்-யப்பட்டனர் என மொரட்டுவ எகொட உயன பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்-யப்பட்டவர்களில் நான்கு பெண்களும் எட்டு ஆண்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டிப் பணப் பரிவர்த்தனையே தகராறுக்குக் காரணம் எனக் கூறிய பொலி-ஸார், இரு தரப்பிலும் இருவர் காயமடைந்து காணப்பட்டனர்எனவும் கூறினர்.

இவர்களது உறவினர்களுக் கிடையில் இந்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிகுவித்த பொலிஸார், அவர்களும் கொரலலவெல்லபிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (05)

# சங்கானையில் கசிப்புடன் சந்தேகநபர் கைதானார்!

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை சேர்வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இரண்டு லீற்றர்கசிப்புமீட்கப்பட்டதுடன்சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மானிப்பாய் பொலி-ஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னரும் கசிப்புடன் கைதானவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாசகரின் குழந்தை நல்லூரில் மாயம்

நல்லூரில் யாசகம் பெற்றுவந்த தம்பதியின் இரண்டரை வயதான பெண் குழந்தையொன்று தீர்த்த திருவிழாவின் போது காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் திருவிழாவில் யாசகம் பெறுவதற்காக வவுனியாவின் செட்டிக்குளம் பகுதியில் இருந்து வருகை தந்த தம்பதியின் குழந்தையே இவ்வாறு காணாமற் போயுள்ளது.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் குழந்தையின் பெற்றோரால் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சந்திப்பால் பயன் ஏதும் இருக்குமா?

தமிழ்மக்கள்கூட்டணியின்தலைவர்க.வி.விக்னேஸ்வரன் அண்மையில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். இந்தியப் பிரதமர் மோடியை சந்திக்கும் வகையில் ஓர் கடிதம் அனுப்ப, தமிழ்த் தேசியம் பேசும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து வரவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கும் அவருடன் கலந்துரையாடவேண்டிய விடயங்கள் தொடர்பில் கூடி ஆராயவேண்டும் என்றும் இவ்வாறு கட்சிகள் இணைந்து ஓர் கடிதத்தை தயாரித்து அனுப்பியதன் பின்னர் கூட்டகச் சென்று சந்திக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் – அதன் அழுத்தத்தால் உருவாக்கப்பட்ட – அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தினைப்பலப்படுத்திஅதிகாரங்களைப்பகிரலாம்என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான விக்னேஸ்வரனை கடந்த சில மாதங்களாகவே நம்ப வைத்துவரும் பின்னணியில் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதலாம் என்று அவர் ஏனைய தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது கடிதத்திற்கு இதுவரையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் பதில் வழங்கியதாகத் தெரியவில்லை. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சியினர் அவரது அழைப்பை ஏற்கக்கூடும். இந்தியா, 13இன் முழுமையான நடைமுறைப்படுத்தல் என்கிற விடயங்களை ஜனநாயகக் கூட்டணியும் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் அவர்கள் விக்னேஸ்வரனின் இந்த அழைப்போடு தங்களை இணைத்துக்கொள்வதில் சிரமங்கள் இருக்காது என்று எதிர்பார்க்கலாம். தமிழ் அரசுக் கட்சியும்கூட இது விடயத்தில் முரண்பட்டு நிற்பதற்கு வாய்ப்புக்கள் அரிதுதான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்த்து ஏனைய கட்சிகள் இது விடயத்தில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கக்கூடியவை அல்ல. அதனால் அவை அனைத்துமே இப்படி ஒரு கடிதத்தை எழுத இணங்கக்கூடும்.

ஆனால், அப்படி ஒரு கடிதத்தை எழுதுவதன் மூலமோ அதன் வழியாகப் இந்தியப் பிரதமர் மோடியை நேரில் சந்தித்துப் பேசுவதன் மூலமோ ஏதாவது நடக்குமா? தீர்வு கிட்டுமா? என்கிற கேள்விகளுக்குச் சாதகமான பதில் எதுவும் கிடையாது.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தான் கொடுக்கக்கூடிய அழுத்தத்தை தொடர்ந்து கொடுத்து வருவதாகவே சொல்கிறது. அண்மையில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மோடி நேரில் சந்தித்துப் பேசியபோதுகூட, அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படியும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தும்படியும் மோடி வலியுறுத்தியிருந்தார். இலங்கையில் தமிழர்களின் பிரச்சினையில் நீண்டகாலமாகவே இந்தியாவின் நிலைப்பாடு இதுதான். இதைத் தாண்டி, போர் முடிந்த கடந்த 14 வருடங்களில் இந்தியா இம்மியளவுகூட விலகியதில்லை.

இந்த நிலையில் பிரதமர் மோடியைத் தமிழ்த் தலைவர்கள் நேரில் சந்தித்துப் பேசினால்கூட 13 என்கிற கொள்கை நிலைப்பாட்டில் இருந்து இந்தியா விலகிச் செல்வதற்கோ, சமஷ்டித் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதற்கோ வாய்ப்புகள் அதிகமில்லை. இந்தியாவில் பொதுத் தேர்தல் முற்கூட்டியே நடக்கலாம் என்கிற நிலையிலும் இலங்கையிலும் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்கிற எதிர்ப்பார்ப்பு இருக்கும் நிலையிலும் இத்தகைய சந்திப்பு இரு தரப்பினருக்கும் தேர்தல் அரசியலில் பயன்படுத்தப் பயன்படலாமே தவிர, அதைத் தாண்டிய எந்தவொரு கொள்கை மாற்றத்தையும் இந்தியாவிடம் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியா தன்னால் சொல்லக்கூடிய விடயங்களை கொழும்புக்கு ஏற்கனவே சொல்லிவிட்டது. அதற்கு மேல் இந்தச் சந்திப்புக்களால் எந்த மாற்றங்களையும் ஏற்பட வாய்ப்புக்கள் மிகக் குறைவே. அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்கிற மோடியின் அரசியல் கொள்கையின்கீழ், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று யார் கேட்டும் இந்தியா வலியுறுத்தக்கூடிய நிலையில் இல்லை.

எனவே முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ள சந்திப்பு வெறுமனே மற்றொரு அரசியல் சந்திப்பாக முடியுமே தவிர அதனால் மக்களுக்கு எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை.

# வாழ்க அந்தணர்

## யாழ்ப்பாணத்து அந்தனக் குருமார் பற்றிய ஒரு பார்வை !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண், அவுஸ்திரேலியா



வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சைவம் தளைக்கவும் வேத நெறி விளங்கவும் இறையாசி பெற்று இப்பூவுலகுக்கு வந்தவர் தான் திருஞானசம்பந்தர். மூன்று வயதிலே இறை தரிசனம் பெற்று ஞானவான் ஆகியவரின் அருட் பாடலை நோக்கும்பொழுது அங்கு காணப்படும் முதல் வார்த்தையே வாழ்க அந்தணர் என்பதேயாகும்.

அந்தணர்கள் வாழ்ந்தால் தான் ஆட்சி சீராக இருக் கும். அந்தணர்கள் வாழ்ந்தால் தான் மழை நன்றாகப் பெய்யும். அந்தணர்கள் வாழ்ந்தால்த்தான் யாவுமே சிறப்பாகும் என்று வாழ்த்துக்கூறுவது முக்கியம் வாய்ந்த கருத்து எனலாம்.

ஈழத்தில் பல அந்தணப் பெருமக்கள் காலத்துக்குக் காலம் செய்த செயற்பாடுகளை நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசிய மானதாகும். ஆசாரம், ஒழுக்கம், பண்பாடு இவற் றையெல்லாம் உயிரினும் மேலாகக் கருதி அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தை ஒரு வரலாறு என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டு.

வடமொழி, தமிழ்மொழி, ஆங்கிலமொழி, எனப் பன் மொழியறி வினைப் பெற்றவர்களாகவும் பலநூல்களை ஆக் கியவர்களாகவும் , அதேவேளை காவியம், ஓவியம், சிற் பம், கட்டிடம், ஜோதிடம், கணிதம், என பல்துறை ஆற்றலைக் கொண்டவர்களாகவும் இருந் தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற பொழுது மிகவும் பெருமையாகவே இருக்கிறது அல்லவா !

சங்க இலக்கியங்களையும், இலக்கண நூல்களையும், புராணங்களையும் இதிகா சங்களையும் கற்றுத்தேர்ந்து மிகச் சிறந்த பண்டிதர்களாகவும் வித்துவான்களாகவும் விளங்கி யிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கின்ற வேளை மிகவும் பிரமிப்பே தோன்றுகிறதெனலாம்.

கோவிலில் பூசகராக இருந்துகொண்டே படிக்கவேண் டிய அத்தனையும் படித்து யாவராலும் மதிக்கப்பட்டார்கள் என்பதை அறிகின்ற பொழுது சம்பந்தப் பெருமானின் வாழ்க அந்தணர் என்பதற்கு உரிய அர்த்தம் அமைந்துவிட்டது என்றுதான் கொள்ள வேண்டும்.

புராணங்களுக்கு விளக்கம் சொல்லுவது, வடமொழி நூல் களுக்கு ஏற்ற விளக்கங் களைத் தமிழ் மொழியில் தருவது, செய்யுள்கள் இயற்றுவது, பல இலக்கியங்களுக்கு உரைவிளக் கம் செய்வது, பூஜைகளுக்கான கிரியைகள் பற்றிய விளக்கங் களை எழுதுவது , என்று பல வித்துவச் செயற்பாடுகளை எல் லாம் அவர்கள் ஆற்றியுள்ளார்கள் என்பதை இக்காலத்தில் வாழு கின்ற ஒவ்வொரு அந்தணர்க ளும் அறிவது மிகவும் அவசியம் என்று கருதுகின்றேன்.

அந்தணர்கள் வாழ்வானது அனைவருக்குமே எடுத்துக்காட் டாக அமையும் என்பது இங்கு நோக்கத்தக்கதாகும். எங்கள் வாழ்வில் கோவில் என்பது மிகவும் இன்றியமையாததாகும். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது வாழ்வின் அடிநாதமாகும். அந்தக் கோவிலில் ஆண்டவனின் பிரதிநிதியாக அந்தணப் பெருமக்கள் அன்று தொட்டு இன்றுவரை இருந்து வருகிறார்கள். இன்பமோ துன் பமோ எது வந்தாலும் எல்லோரும் நாடுமிடம் கோவில்களே யாகும். அங்கு தங்களின் மன வெண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள நிலைக்களனாக இருப்பது அந்தணப் பெருமக்களேயாவர்.

அந்தணப் பெருமக்களின் வாயிலிருந்து வருகின்ற ஒவ் வொரு வார்த்தைகளையும் இறைவனின் ஆசியாகவே எடுப் பது தொன்று தொட்டு நடந்துவரும் நடைமுறை எனலாம். நம்பிக்கை வைத்து அந்தணர் வாக்குகளை தெய்வத்தின் வாக்காகவே அடி யார்கள் ஏற்றுக் கொள்ளுகின் றார்கள். இதனால் அந்தணர்கள் சமுதாயத்தில் உயர் நிலையில் வைத்து போற்றப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படிப் போற்றப்படும் அந்தணர்கள் படிப்பாலும், சமய அனுஷ்டானங்களாலும் உயர்ந்து நிற்பது மிகவும் அவசிய மாய் இருக்கிறது. இதனைக் கருத்தில் இருத்தியே எமது முந்தையோர் பலர் முழுமை பெற விளைந்தார்கள் எனலாம்.

கோவிலில் உள்ள குருக்கள் சொன்னால் அதனால் தங்கள் குடும்பமே நிம்மதி அடையும் என்னும் நிலையான நம்பிக்கை மக்கள் மத்தியில் வேரூன்றி இருக்கிறது. இதனால் சுகதுக்கம் யாவற்றையும் பகிர்ந்து அதற்கு ஏற்ற ஆலோசனை வழங்கும் நல்லாலோச கராகவே கோவில் குருக்கள்மாரை எண்ணினார்கள் என்பது முக்கியமாகும்.

அதற்குத் தகுந்தாற்போன்று கோவில் குருக்கள்மாரும் தமது அறிவு ஆற்றலையும் ஒழு க்க ஆசாரங்களையும் வளர்த்தி ருந்தார்கள் என்பதும் நோக்கத் தக்கது எனலாம். கோவி லில் பூஜையென்பது பரம்பரையாக வும் இருந்திருக்கிறது. பரம்பரை யாக அமையும் பொழுது ஊர்மக் களின் உள்ளங்களில் கோவில் பூஜை செய்கின்றவர்கள் மரி யாதைக்கு உரியவர்களாகி அமர்ந்துவிடுவார்கள். கோவிலுக்குச் செல்லாத வேளைகளிலும் குருக்களை அவரின் வீட்டில் சென்று பார்த்து அவரிடம் ஆலோசனைகளையும் ஆசிகளையும் பெறுவது அன்று தொடக்கம் இன்றுவரை நடைமு- றையில் இருந்துவரும் சம்பிரதா யம் ஆகிவிட்டது எனலாம். இது இன்றும் யாழ்ப்பாணத்தில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அந்தணர்கள் வீட்டுக்குச் சென்று ஆசிபெறும் அளவுக்கு அந்தணர்களும் இருக்கவே ண்டியது அவசியமாகிறது, கூடா ஒழுக்கங்களைத் தவிர்த்து ஒழுக்கமாக வாழுகின்றா ர்கள் - வாழும் அந்தணர்களாகவே கருதப்பட்டு அவர்களின் வாழ்த்தி னைப்பெற்றுவிட மக்கள் விரும்பு- வதை இன்றும் நடைமுறையில் காணக் கூடியதாகவே இருக் கிறது.

வித்துவான் கணேசையர், இன்ஸ்பெக்டர் சதாசிவ ஐயர் அச்சுவேலி குமாரசாமிக் குரு க் கள், வைத்திய நாதக்குருக்கள், திருகோணமலை பூரணாநந்தக் குருக்கள், காரைநகர் வைதீஸ் வரக் குருக்கள், நயினை கைலாச நாதக் குருக்கள், நயினை பரமேஸ்வரக் குருக்கள், நவாலி விஸ்வநாத குருக்கள், இணுவில் இராமநாத குருக்கள், கோப்பாய் பஞ் சாட்சர சர்மா, பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், அறிஞர் லக்ஷ்மண ஐயர் வியா கரண சிரோன்மணி தியாகராஜக்குருக்கள், நியாய சிரோண்மணி சுப்ரமணிய சாஸ் திரிகள், வியாகரண சிரோன்மணி சீதாராம சாஸ்திரிகள், இவர்களெல் லாம் கல்வி கேள்விகளால் சமூகத்தில் உயர்ந்து விளங்கி இருக்கிறார்கள். யாருக்காவது மொழி பற் றியோ. இலக்கியம் பற்றியோ, இலக்கணம் பற்றியோ, வேதநெறி பற்றியோ அல்லது சமயம் பற்றியோ விளக்கங்கள் தேவைப்படும் இடத்து அவர்களை நாடினால் அவர்க ளுக்கு உரிய முறையில் விளக்கம் அளிக்கும் விதத்தில் அவர்களின் அறிவுப் புலம் ஆழ மாகவும் அகலமா கவும் அமைந்திருந்தது என்பது குறிப்பிடப் படவேண்டிய முக்கிய விடயமாகும்.

வித்துவான் கணேசையர் இந்திய அறிஞர்களாலேயே பெரிதும் மதிக்கப்பட்டவர். இவ ரின் இலக்கண இலக்கிய தமிழ் மொழி அறிவால் இவர் அந்தணர் குலத்துக்கே- வாழ்ந்த காலத்தும் வாழ்ந்து மறைந்த பின்னரும் பெருமையினைக் கொடுத்த வரா கவே விளங்குகிறார். வித்துவ சிரோன்மணி எனப் பட்டம் அளித்துக்கௌரவிக்கப்பட்ட அந்தணப் பெரியவராக இவர் விளங்குகிறார் என்பது வாழ்க அந்தணர் என்ப தற்கு ஏற்றதாக இருக்கிறதல்லவா ?

தமிழின் மிகப்பெரிய சொத்தான தொல்காப்பியத்தில் பல ஆராய்ச்சிகள் செய்து அது தொடர்பாகபல வியங்களை வெளியிட்டு, தமிழில் பல ஆய்வுகளைக் கட்டுரைகளாக வெளியிட்டு ஈழத்துத் தமிழறிஞ ராக எல்லோராலும் மதிக்கப்பட்ட வர் வித்து வான்கணேசையர் அவர்கள். இதனால் இவரைப் பாராட்டும் முகமாக 1938 ஆண்டு ஐப்பசி மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில்பல அறிஞர் கள் சூழ்ந்திருக்க திரு சு . நடேசபிள்ளை தலைமையில் நடந்த பெரு விழாவில் அப் பொழுதே இரண்டாயிரம் ரூபா பெறுமதியுடைய பொற்கிளி வழங்கப் பட்டது. இவ்விழாவில் சுவாமி விபுலானந்த அடிகளாரும் கலந்து சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரியதிராவிடபாஷாஅபிவிருத் திச்சங்க நிறுவனராய் இருந்தவர் சதாசிவ ஐயர் அவர்கள். இவர் பாடசாலைப் பரிசோதகராக விளங்கிய பொழுதும்- வட மொழி, தமிழ் மொழி, ஆங்கில மொழி, யாவற்றிலும் புலமை பெற்றும் இருந்தார். இவரால் பாட நூல் களும் எழுதப்பட்டன.

(6ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரம் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பிற்குச் சாட்சியம்

## மாவை சேனாதிராசா சுட்டிக்காட்டு





கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி, இங்கு தமிழ் மக்கள் மீது இன அழிப்பு இடம்பெற்றிருக்கின்றது என்பதற்கு சாட்சியாக இருக்கின்றது.

ஆகவே இந்த மனிதப் புதைகுழியை ஆய்வுசெய்பவர்கள் நேர்மையாகவும், விஞ்ஞான ரீதியிலும் எந்தவித குறுக்கீடுகளுக்கும், தலையீடுகளுக்கும் இடமளிக்காது, பகிரங்கமாக உண்மைகள் வெளிப்படக்கூடியவகையில் ஆய்வுசெய்யப்படவேண்டுமென இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அமைந்துள்ள இடத்திற்கு மாவை சேனாதிராஜா, விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார், குறித்த விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

தமிழினத்தின் விடுதலைக்காக இடம்பெற்ற போராட்டத்தில், லட்சக்கணக்கான தமிழ் மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு பல்லாயிரக் கணக்கானவர்கள் அழிக்கப் பட்டிருக்கின்றனர் என்பதற்கான ஒரு சாட்சியாகவே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைப் பார்க்க முடிகின்றது.

இவ்வாறு எமது தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதற்கான ஒரு சாட்சியம் கண்டுபிடிக்கப்பட்டமையால் அகழ்வாய்வுகள் இங்கு முன்னெடுக்கப்படுகின்றன. எலும்புக்கூடுகள், ஆடைகள், உள்ளாடைகள் உள்ளிட்டவை சாட்சியங்களாகப் பெறப்படுகின்றன.

இந்நிலையிலே எங்களுடைய இனத்தின் விடுதலைக்காக தங்களுடைய உயிர்களைத் தியாகம்செய்தவர்களுக்கு நாம் எமது இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்தவேண்டும்.

இதுபோன்ற மனிதப் புதைகுழிகள் தமிழர்களுடைய தேசத்தில் இன்னும் எங்கெங்கு இருக்கின்றது என்பதை நாம் அறியோம். இது ஒரு முக்கியமான அடையாளம்.

இதைப்போல இன்னும் பல நூற்றுக்கணக்கான இடங்களில் போர்க்காலத்திலும், இறுதிப்போர் காலத்திலும் தமிழ் மக்கள் கூட்டங்கூட்டமாக கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது இதனுடைய வெளிப்பாடாகத் தெரிகின்றது.

இந் நிலையில் இந்த மனிதப் புதைகுழி ஆய்வுகள் விஞ்ஞானபூர்வமாக இடம்பெறுகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

அகழ்வாய்வுகளுக்குத் தகுந்தவர்கள் இந்த எலும்புக்கூடுகளையும், தடையப்பொருள்களையும் ஆராய்ந்து பார்த்துப் பதில் சொல்ல வேண்டும்.

அரசாங்கமும், ஜனாதிபதியும் இந்தவிடயம் தொடர்பில், சர்வதேச விசாரணைகள் நடத்துவதற்கு ஆயத்தம் என்று சொல்கின்ற நிலையை தற்போது காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு இந்த மனிதப் புதைகுழிகள் சாட்சியங்களாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன.

போரின் இறுதியில் போராளிகள் உட்பட, பொதுமக்கள் பலர் சரணடைந்துள்ளனர்.

போரின் இறுதிப் பகுதியிலே பாதுகாப்பான இடங்களுக்கு வாருங்களென அரசு, இராணுவத்தினர் அழைப்புவிடுத்திருந்தனர்.

அவ்வாறு பாதுகாப்பான இடங்களென அரசும், இராணுவமும் குறிப்பிட்ட இடங்களில் தமிழ் மக்கள் ஒன்றுகூடியிருந்தபோது இலங்கை அரசுவிசக்குண்டுகள்வீசிமக்களைக் கொன்றது. எத்தனை ஆயிரம் பேர் அவ்வாறு கொல்லப்பட்டார்களென இன்னும் சரியாக இறுதி செய்யப்படவில்லை.

ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1983 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றிலே இந்திராகாந்தி அம்மையார் பேசும்போது, இலங்கையில் நடப்பது இனப்படுகொலை எனத் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

இப்போது இந்தப்புதைகுழிகளில் கண்டுபிடிக்கப்படுபவை எல்லாம், எமது இனத்துக்கு இடம்பெற்றது இனப்படுகொலைதான், இங்கு இன அழிப்பு இடம்பெற்றிருக்கின்றது என்பதற்கு சாட்சியங்களாகவிருக்கின்றன.

ஆகவே இந்தப் புதைகுழியை ஆய்வுசெய்பவர்கள் நேர்மையாகவும், விஞ்ஞானரீதியிலும் எந்தவித குறுக்கீடுகளுக்கும், தலையீடுகளுக்கும் இடமளிக்காது, பகிரங்கமாக உண்மைகள் வெளிப்படக்கூடியவகையில் இவை ஆய்வு செய்யப்படவேண்டும்.

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், தமிழர்களுக்கான விடுதலைக்காக இடம்பெற்ற போரில் இன அழிப்பு இடம்பெற்றதற்கு சாட்சியாக இந்த மனிதப் புதைகுழிகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அழுது கொண்டிருக்கின்றனர். போரிலே சரணடைந்தவர்கள் எங்கே எனத் தெரியாமலிருக்கின்றது.

இவ்வாறு இன அழிப்பிலிருந்து மீண்டு எஞ்சியிருந்து போராடிக்கொண்டிருக்கின்ற தமிழ் மக்களுக்கு விடுதலைகிடைக்க வேண்டும் – என்றார்.

மேலும் இதன்போது நாடாளுமன்றஉறுப்பினர்களானசாள்ஸ்நிர்மலநாதன், விநோனோகராதலிங்கம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேசசபைஉறுப்பினர்இராமலிங்கம் சத்தியசீலன் உள்ளிட்டவர்களும் குறித்த இடத்திற்கு பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

## தாமரைக் கோபுரத்தை ஒரு வருடத்தில் மூன்று லட்சம் சுற்றுலாவிகள் பார்வை

கொழும்பு தாமரைக் கோபுரம் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தி அடைந்துள்ளது. இந்த ஒரு வருடத்தில் 3 லட்சம் பேர் அதனைப் பார்வையிட்டனர்.

கொழும்புதாமரைக்கோபுரத்தின் நெலும் குளுன என அழைக்கப்படும் பகுதிகள் 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஒரு வருடம் பூர்த்தியை நினைவுகூரும் வகையில் வெள்ளிக்கிழமை சர்வ சமய அனுஷ்டானம் இடம்பெற்றது.

சமய அனுஷ்டானத்தின் முடிவில், பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் (ஓய்வு) பிரசாத் சமரசிங்க ஊழியர்களிடம்உரையாற்றினார். (05)

## பிடியாணைக்குரியவரை தேடிச்சென்ற பொலிஸ் பரிசோதகருக்கு நாய்க்கடி

நாவுல பொபெல்ல பிரதேசத்தில் வசிக்கும் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரைக் கைது செய்ய சென்ற நாவுல பொலிஸ் குழுவினர் மீது வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் கடித்ததில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாத்தளை நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கமைய, நாவுல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் குழுவொன்று சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில், சந்தேக நபரை பொலிஸார் பெரும் பிரயத்தனத்தின் பின்னர் கைது செய்துள்ளனர். (05)






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 200/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## ஹேலீஸ் சோலார் யாழ்ப்பாணத்திற்கான காட்சியறை திறப்பு நிகழ்வின் புகைப்பட தொகுப்பு...













## யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான கண்காட்சியின் புகைப்பட பதிவுகள்.....




















55% வரை
எங்களுடைய அறிமுக சலுகையை பெறுங்கள்

Hayleys Solar

யாழ்ப்பாணத்திற்கான காட்சியறை

இல. 148-1/1, பலாலி வீதி,
தபாற் பெட்டி சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான கண்காட்சியில் எமது பிரத்தியேக காட்சியறையை பார்வையிடலாம்

Hayleys Fentons Since 1921
100 வருடங்களுக்கு மேலாக சிறந்த பொறியியல்

www.hayleyssolar.com

அழையுங்கள் 0112 102 102

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான கண்காட்சியின் புகைப்பட பதிவுகள்.....

























காலைக்கதிர் Kalaikkathir

# லிபிய வெள்ளத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தினார் மஹிந்த ராஜபக்ஷ

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பிலுள்ள லிபிய தூதரகத்துக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்துள்ளார்.


கொழும்பிலுள்ள லிபிய தூதரகத்திற்கு விஜயம் செய்து லிபியாவில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் இரங்கல் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

லிபியாவில்ஏற்பட்டவெள்ளப்பெருக்கில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)





# வாழ்க அந்தணர்.....



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தியோகம் பார்த்தாலும் ஒழுக்க சீலராக விளங்கிய காரணத்தால் வாழ்க அந்தணர் என்னும் வரையறைக்குள் இவரும் வாழ்த்துக்கு உரியவ ராகின்றார்.

வியாகரண சிரோன்மணியான சீதாராம சாஸ்திரிகள் ஈழத்துக்கு ஒரு பொக்கிமா கவே வந்தமைந்தார். இவரிடம் வேதங்களை ஆகமங்களை ஏன் தமிழ் இலக்கியங்களை கற்றவர்கள் அனைவருமே பெரும் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆழமும் அகலமும் கொண்ட சிறந்த படிப்பாளியாகவும் நல்ல ஆசானாகவும், நல்ல ஒழுக்கமுடை அந்தணப் பெரியவராகவும் இவர் முன்மாதிரியாக விளங்கி இருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் இந்து நாகரிகத்துறை தலைவரான பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களின் குரு என்பதும் மிகவும் முக்கியமான வியமாகும். இவரிடம் படித்தவர்கள் பலர் இன்றும் சிறந்த அறிவினைத் தம்மகத்தே கொண்டு விளங்குகிறார்கள் என்பதும் மற்றவர்களால் மதிக்கப்படுகிறார்கள் என்பதும் அந்தணர்களுக்கே மிகவும் பெருமையாகவே இருக்கிறது எனலாம்.

இவர் காலத்தில் வாழ்ந்தவர்தான் நியாய சிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள். இவரும் அந்தணர்களுக்கு வாய்த்தவொரு அறிவுப்பெட்டகமே எனலாம். இவரிடம் வேதம் ஆகமம் கற்றவர்கள் பலர் இன்று உலகெங்கும் சென்று அந்தணர் பெருமையினை அறியப் பண்ணுகிறார்கள் என்பது பெருமைக்குரியதாகவே கொள்ளமுடியும்.ஒழுக்கமும் அறிவும் முக்கியம் என்று இவர்கள் கருதியதால் இவர்களின் அறிவூட்டல் நல்லதொரு வழியினை வகுத்துக் கொடுத்தது எனலாம்.

காரைநகரில் இருந்து கன்னித் தமிழைக் கட்டிக்காத்து அதேவேளை வடமொழியினையும் அணைத்து நின்ற அறிவுநிறை அந்தணராக அனைவராலும் அங்கீகரிக்கப் பட்டவர்தான் கலாநிதி பண்டிதமணி வைத்தீஸ்வரக் குருக்களாவார். ஈழத்துச் சிதம் பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோவில்தான் இவரின் பாரம்பரியமாக விருக்கிறது.இங்குதான் இவரின் அறிவு விருத்திக்கு வித்திடப் பட்டது எனலாம்.

காரைநகரில் யோகர் சுவாமிகளின் ஆசியுடன் 01/01/1940 மணிவாசகர் சபை ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் மூலமாகக் குருக்கள் சைவ உலக்குக்கு ஆற்றியபணிகள் அவரை வாழ்க அந்தணர் என்று இன்றளவும் போற்றும்படி அமைந்திருக்கிறது. 1960 ஆம் ஆண்டு காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகம் இவரால் நிறுவப்பட்டுபல தமிழ்ப்பணிகள் நடைபெற உந்துசக்தியாக இருந்தது என்பதும் மனங் கொள்ளத் தக்கதாகும்.

குருக்கள் அவர்களின் தொண்டுகளைக் கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 13/10/2002 இல் தத்துவ கலாநிதி பட்டத்தை வழங்கியதே அவரின் ஆற்றலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு அல்லவா !

பலாலியைச் சேரந்த கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்களின் மகன் அறிஞர் லக்ஷ்மண ஐயர் ஆவர். இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி, ஜேர்மன், பிரெஞ்சு, லத்தின், சிங்களம் , ஆகிய பன் மொழிப் பாண்டித்தியம் மிக்கவர். இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்து பின்னர் இந்திய தத்துவ சாஸ்திரத்தை காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் படித்து முதுமானியாகி பின் கல்வியியற்றுறையிலும் பட்டம் பெற்று இலங்கைக் கல்வி அமைச்சில் கல்வி இயக்குநராக விளங்கியவர். இவரால் முதன் முதலாக தமிழில் எழுதி வெளிவந்த நூல் இந்திய தத்துவஞானம் ஆகும்.இவரின் வருகை ஈழத்து அந்தணர்களுக்கு மிகவும் பெறுமதியினைக் கொடுத்தது என லாம். இவரின் மொழி அறிவும், தத்துவ அறிவும், இவரின் ஒழுக்கத்துடன் கூடிய வாழ்வும் இவரை அந்தணர்கள் இன்றும் பெருமையுடன் நினைத்திடப் பண்ணுகிறது. இவரிடம் கல்வி கற்றவர்கள் பலர் உலகில் பல உன்னதமான நிலைகளில் அறிவினைத் தமதாக்கிக் கொண்டவர்களாக விளங்குவதும் குறிப்படத்தக்கதே.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் குருத்துவத்தோடு பன் மொழி அறிவினை பெற்று ஒழுக்க சீலராக வாழ்ந்து அந்தணர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினார் என்பதை அனைவருமே ஏற்றுக் கொள்வார்கள். பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் இருந்துகொண்டும் அந்தணர்க்கு உரிய நடை உடை பாவனை அனைத்தையும் தனது வாழ்நாள் முழுவதுமே கடைப்பிடித்து வாழ்ந்தார் என்பது இங்கு மிகவும் முக்கியமான வியமாகும். யாழ்ப்பாண மண்ணுக்கே ஒரு முன்மாதிரியாக - அந்தணர் வாழ்வில் பேராசிரியர் அவர்கள் விளங்கினார் என்பதை அனைவருமேஒத்துக் கொள்ளுவார்கள்.

கோப்பாயின் அறிவார்ந்த அந்தணராக விளங்கியவர் பண்டிதர் பஞ்சாட்சர சர்மா அவர்கள். இவரும் பன் மொழி அறிஞராவார் உத்தியோகம் பார்த்தாலும் அந்தணர்களுக்குரிய நடையுடை பாவனை ஒழுக்கத்தைப் பொன்னே போற்றி வாழ்ந்திருக்கிறார்.

நயினை கைலாசநாதக் குருக்கள் வேதம், ஆகமம், மொழி ஆற்றல் மிக்கவர்கவர். இவ ரின் காலத்தில் இணுவில் இராமநாதக் குருக்கள், நவாலி விஸ்வநாதக் குருக்கள் நயி னை பரமேஸ்வரக் குருக்கள் என்னும் அந்தணப் பெரியோர்கள் சிறந்து விளங்கினா ர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. வடக்கில் இப்பெருமக்கள் சிறந்துவிளங்க கிழக்கில் பூரணாநந்தக் குருக்கள் ஒளிவிட்டு நின்றார். அவரின் மைந்தன் வியாகரண சிரோன்மணி தியாகராசக் குருக்கள் குருத்துவத்துடன் ஆசியராகவும் விளங்கி பெருமையி னைச் சேர்த்தவர் ஆகிறார்.

யாழ்ப்பாணத்தின் பண்பாடு கலாசாரத்தைக் காப்பாற்றி வருவதில் கோவில்களின் பங்களிப்பு முக்கியமானதாகும்.கோவில்கள் சைவத் தமிழ்ச் சமூகத்தில் முக்கிய இடம் வகிக்கும் நிலைக்கு அங்கு ஒழுங்காக நடைபெறும் பூஜைகளும், அதனை ஆகம முறை யில் -பரம்பரையிலோ அல்லது வேறு வழியிலோ செய்துவருகின்ற அந்தணப் பெரு மக்கள் காரணம் என்பதும் நோக்கத்தக்கதாகும்.அந்த அந்தணப் பெருமக்கள் ஆரம்ப த்தில் தாத்தாவிடமோ அல்லது தந்தையாரிடமோ வேத ஆகமங்களை வழிமுறையில் கற்று அவர்களுடன் கூடவே சென்று அவர்களின் வழிகாட்டலில் பூஜை முறைகளை முறையாக அறிந்து அதனையே தாமும் கைக்கொண்டு வந்தார்கள்.

அவர்களில் ஒரு சிலர் பாடசாலைக் கல்வியினையும் பெற்றவர்களாகவும் விளங்கி இருந்தார்கள்.ஆனால் பெரும்பாலான அந்தணர்கள் தங்களின் குடும்பத்திலேயே கற் றுத் தேறுகின்ற நிலையிலேயே இருந்தார்கள் என்பதும் நோக்கத்தக்கது. இந்தநிலை படிப்படியாக மாற்றமுறத் தொடங்குகிறது. வேதம், ஆகமம், இவற்றைக் குருவிடம் சென்று கற்றாலும் பாடசாலைக் கல்வியினையும் கற்கவேண்டும் என்னும் எண்ணம் அந்தணர்கள் மத்தியில் ஏற்பட்டதும் அந்தணர்களின் போக்கிலே அதாவது வளர்ச்சி யிலும் சிந்தனையிலும் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது எனலாம்.

பல அந்தணர்கள் குருகுலக் கல்வியோடு உயர்கல்வியினையும் பெற்று பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும் வரும் நிலை வந்தது.இந்த நிலையினால் அந்தணர்கள் முந்தையோரிலும் பார்க்க வேறு வகையில் சிந்தித்து சமூகத்தைப் பார்க்கும் ஒருபுதுப் பார்வை உருவானது எனலாம்.

இணுவிலில் தர்மசாஸ்தா குருகுலத்தை ஸ்தாபித்து பல அந்தணக் குருமாரைஉருவாக்கியவரும் உருவாக்கிக் கொண்டிருப்பவருமான ரீ தாணு மகாதேவ வாத்தியார் அவர்கள் பாடசாலைக் கல்வியையும் அதே வேளை வேத ஆகமக் கல்வியினையும் நன்கு அறிந்தவர். இவரிடம் செல்லும் மாணவர்களும் பாடசாலையில்படித்துக் கொண்டே வேதாகமம் படிக்கச் செல்லும் மாணவர்களாய் இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதேயாகும்.

தெல்லிப்பளையில் இருக்கும் ரீ விஸ்வநாராயணசர்மா அவர்கள் வேத ஆகமத்தோடு ஆங்கிலம், தமிழ் , இவற்றிலும் புலமை மிக்கவர். இவரிடமும் மாணவர்கள் படிக்கிறார்கள்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்துக்குருமார் ஒன்றியத்தின் மூலமாக நடைபெறும் வகுப்புக்களில் ஆசியர்களாக இருக்கின்ற ரீ நவநீதகிருஷ்ணசர்மா கோப்பாய் ரீசிவானந்த சர்மா, இவர்கள் ஆங்கிலமும் வேதாகம அறிவினையும் பெற்றவர்கள் என்பதும் முக்கியமானதாகும்.

அந்தணர்கள் மத்தியில் இன்று ஒருவித எழுச்சி ஏற்பட்டிருக்கிறது என்றுதான்சொல்ல வேண்டும். இன்றுகணனியானதுதன்னைக் கால்பதித்துக் கொண்டு விட்டது. கணனி யுகத்தில் எல்லோரும் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும்வாய்ப்பு உருவாக்கப் பட்டி ருக்கிறது. இதனால் அந்தணர் அல்லாதோர் கேட்கும் ஐயங்களுக்கு ஏற்ற பதிலினை அளிக்கும் தகுதியை அந்தணர்கள் தாம் பெறவேண்டும் என்னும் எண்ணம் யாவரிடமும் நிறைந்தே காணப்படுகிறது. இதன் காரணமாகவும் காலத்தின் தேவை காரணமாகவும் வரன்முறையான அறிவோடு உயர்கல்வித் தகைமையினையும் பெறவேண்டும் என்னும் பேரவா அந்தணர்கள் மத்தியில் காணப்படுகிறது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

பூஜையுடன் மட்டும் அந்தணர்கள் நின்றுவிட்ட காலம் மாறி இன்று சமூகத்துக்கு முக ங்கொடுத்து அதற்கான சரியான புரிதலுடன் இருக்க வேண்டும் என்னும் ஒருதேவை கட்டாயமாகிவிட்டது. இதனால் பலவற்றைத் தேடிப் படிக்கும் அளவுக்குஅந்தணர்கள் வளர்ந்து வருகிறார்கள் என்பது முக்கிய அம்சமெனலாம்.

பேராசிரியர் கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் நல்ல ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகிறார்கள். பேராசிரியர் கலாநிதி கைலாசநாதக் குருக்களால் ஆசீர்வாதம் பெற்ற மாணவராகவும் கல்வியாளராகவும் அதே வேளை ஒழுக்கமுடை அந்தணராகவும் விளங்கின்றார். இவரின் வழிகாட்டலில் பல அந்தணர்கள் கல்வியிலும், வேதவழி முறைகளிலும் கற்றுத் தேர்ந்து மற்றவர்களால் மதிக்கப்படும் நிலையிலும் இருக்கிற ார்கள். உலகின் பலநாடுகளிலும் இவரின் மாணவர்கள் மிகவும் மதிப்புநிறை அந்தணர்களாக விளங்கிறார்கள் என்பது. மிகவும் முக்கிய அம்சம் எனலாம்.

அந்தணர்கள் நன்றாகப் படிக்க வேண்டும். வள்ளுவம் சொல்லுவது போல கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக இதனை யாவரும் மனத்தில் மறக்காமல் இருத்தி விடுவது அவசியமாகும். கசடு அறக்கற்றுவிட்டால் போதுமா என்றால் - போதாதாது எவற்றைக் கற்றோமே அதில் என்ன நல்லவியங்கள் எல்லாம் வந்ததோ அவற்றினை வாழ்வாக்கி விடுதல் வேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமானதாகும்.இங்கே தான் - வாழ்வாக்குதல் என்பது வந்து நிற்கிறது. எங்களின் முன்னோர்கள் சமூகத்தில் எப்படி வாழ்ந்தார்கள் ? அவர்களைச் சமூகம் எப்படிப் பார்த்தது ? அவர்கள் அப்படிப் பார்க்கப்பட்டதற்கு அடிப்படியாக அமைந்தது யாது ? இக்கேள்விகள் எங்களுக்குள் கட்டாயம் எழுந்தால் நல்ல வாழ்வினை நாமும் வாழவிரும்புவோம்.

கற்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் கற்றபடி நிற்பதுமாகும் என்பதை நினைவிருத்திக் கொள்ளாத போதுதான் சமூகம் எம்மை வித்தியாசமாகப் பார்க்கும் நிலை உருவாகிவிடுகிறது. அந்தணப் பெரியோர்கள் கல்வி கேள்விகளில்சிறந்து விளங்கியதாலோ , மந்திரங்களைப் பாடமாக்கி அட்சர சுத்தியுடன் நல்ல இராகத்துடன் சொன்னதாலோ , நல்ல அழகான ஆடையாபரணங்களுடன் ஜொலித்ததாலோ மதிக்கப் பட்டார்கள் அல்ல ! அவர்களிடம் காணப்பட்ட அக ஒழுக்கமும், புற ஒழுக்கத்தினா லுமே என்பதை இக்கால அந்தணர்களாகிய நாம் கட்டாயம் உணருதல் மிக மிக அவசியமானதாகும்.

அந்தணர்கள் யார் ? அவர்கள் இலட்சணம் என்ன ? அக ஒழுக்கம் புற ஒழுக்கம் என் றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் அதாவது அந்தணர்களும் நன்கு உணர்ந்து அதன் வழி வாழ்ந்தால்த்தான் வாழ்க அந்தணர் என்னும் வாழ்த்துக்கு உரியவர்கள் ஆவோம் என்பதை நினைவில் இருத்துவது மிகவும் முக்கியமாகும்.

வாழ்க அந்தணர் என்பது ஞானம் பெற்றவரின் அருள் வாழ்த்தாகும். அந்த வாழ்த்து அந்தணர்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டிருக்கிறது.இப்படி மற்றயவர்கள் வாழ்த்துக்கு உரித்தாக்கப் படவில்லை. இதனால் அந்தணர்கள் வாழ்த்துக்கு உரியவர்கள் என்பது தெளிவாகிறதல்லவா! சம்பந்தப் பெருமான் வாழ்த்தினை சொல்லும் பொழுது பொதுவிலே சொன்னாரா அல்லது அந்தணர்களாய் இருக்கின்றார் அனைவருக்குமே சொன்னாரா என்பது சிந்திக்க வேண்டியதாக இருக்கிறதல்லவா !

அந்தணர்கள் வேதம் கற்று ஆகமம் கற்று இறைவனது சன்னிதானத்தில் இறை சிந்தனையுடன் இருந்து பூஜை வழிபாட்டை பக்திபூர்வமாக நடத்தினால் பூமி எங்கணும் செழிப்புறும்.ஆட்சி சிறக்கும். மக்கள் சிறப்பர்.நீதி நிலைக்கும். எங்கும் நிறைவே மலரும்.என்பது சம்பந்தப் பெருமானின் பாரிய உளவியல் சிந்தனையாகும். அந்த ரீதியில்' வாழ்க அந்தணர் என்று அவர் வாயால் வாழ்த்துப் பிறந்து விட்டது.

அவ்வாக்கு இன் றும் நிலைத்திருக்கிறது என்றும் நிலைத்து நிற்கும் என்பதற்கு அகவொழுக்கத்தில் சிறந்த அந்தணர்களே சான்றாகி நின்றிருக்கிறார்கள். எனவே சம்பந்தப் பெருமான் வாழ்த்திய வாழ்க அந்தணர் என்னும் வாழ்த்து அந்தணர்க்குக்கிடைத்த அரும் பெரும் வாழ்த்தாகும் என்று அந்தணர்கள் ஆகிய நாம் மனம்முழுக்க நிறைத்து ஒழுக்கமாய் வாழ்ந்து உயர்வினைப் பெறுவோம் .

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் .

காலைக்கதிர் Kalaikkathir

# மலையக மக்களுக்கு ஏற்றால் போல் குடியேற்றங்களை அமைக்காவிடின் மலையக சமூகம் பேரழிவைசந்திக்கும்

## அருட்தந்தை மா.சக்திவேல் கருத்து



மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் குடியேற்றத்தை ஏற்படுத்த பலமான திட்டத்தை வகுக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் அடையாளம்மட்டுமல்லமலையக சமூகமே பேரழிவையே சந்திக்கும்எனமலையகசமூகஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மலையக மக்கள் இலங்கை மண்ணில் 200 வருட வரலாற்று வாழ்வின் நிறைவை பல்வேறு நிகழ்வுகளுக்கு ஊடாக அடையாளப்படுத்தி கொண்டிருக்கையில் பெருந் தோட்ட நிர்வாகம்மற்றும்தனியார்தோட்ட உரிமையாளர்கள் வரலாற்று நிகழ்வுக்கு சவால் விடுவது போன்று அடாவடித்தனத்தில் ஈடுபடுவதையும், இனவாத முகத்துடன் குண்டர்களை ஏவிவிட்டு மலையகத் தொழிலாள வர்க்கத்தை வன்முறைக்கு இழுப்பதையும் அரசு தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது.

இவ்வரலாற்றுஆண்டில்(1823-2023)மலையமக்கள்இந்நாட்டின் பிரஜைகள், சம உரிமை உடையவர்கள், அவர்கள் இந்நாட்டில் வாழும் இன்னும் ஒரு தேசிய இனம், நில உரிமை வேண்டும், பெரும் தோட்ட தொழிலாளர் வர்க்கத்தை சிறுதோட்ட உரிமையாளர்களுடையகோரிக்கைகளை பல்வேறு மட்டத்தில் எழுப்பிக் கொண்டிருக்கையில்ரம்போடை, மாத்தளை, தெனியாய, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் வீட்டை விட்டு போ என்பதும் தொழிலாளர்கள் தாம் கட்டிய வீடுகள் உடைத்து அவர்களை மண்ணில் அந்நியர்களாகவும் கூலிகளாகவும் அடிமைகளாகவும் நடத்துவதை தோட்ட நிர்வாகங்கள் நடத்துவதை அரசும், தொழிற்சங்கமும், மலையககட்சிகளும்தலையிட்டு முழுமையாகநிறுத்த வேண்டும்.

இதேபோன்றுவெளிச்சத்துக்கு வராத பல சம்பவங்கள் வேறுமிடங்களில் நடந்து கொண்டிருக்கலாம். இதனை இனவாதத்தின் இன்னுமொரு முகம் என்று கூற வேண்டும்.

நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் மலையகத் தமிழர்களின் இருப்புக்கும், கோரிக்கைகளுக்கும் எதிரான நீண்டகால இனவாத செயற்பாடுகளின் தொடர்ச்சி மட்டுமல்ல தொடர்ந்து நிலத்துக்கும் வீடுகளுக்கும் உரிமையற்ற அநாதைகள் என்றே கூறுவதாகத் தோன்றுகின்றது.

ஆதலால் மலையக தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும்கூட்டாக இணைந்து அவசரமாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சட்டத்தை மதிக்காது தொழிலாளர் குடும்பங்களை அவமதிக்குமாறு நடந்து கொண்டவர்களை உடனடியாகநீதியின்முன்நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுத்து இவ்வாறான துர்ப்பாக்கிய நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும். அனைத்து தொழிலாளர்குடும்பங்களுக்கும் தங்களது வீடுகளில், தாங்கள் அமைத்துக் கொண்ட பாதுகாப்பாக, அமைதியாக இருப்பதற்கான சூழ்நிலையை அரசின் பங்களிப்போடு ஏற்படுத்திக் கொடுப்பதோடு இது தொடர்பாகக் கொள்கை அறிக்கையை அரசு வெளியிட அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக தற்போதைய ஜனாதிபதி 2002 இல் சந்திரிக்கா பண்டார நாயக்கா ஜனாதிபதியாக இருந்த போது பிரதமராக பதவி வகிக்கையில் 'தேசிய பௌதீக திட்டம் 2030' அறிமுகப்படுத்தினார். அதற்கு அமைய பெரும் தோட்டங்களை மறைமுகமாக காடுகள் ஆக்குவதற்கும் நகராக்க திட்டத்தின் கீழ் மலையக மக்களையும் வாழ வைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

அத்தகைய திட்டங்களை தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு பெருந்தோட்டங்கள் காடுகள் ஆக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திலிருந்து மலையக மக்களைப் பாதுகாக்கவும் மலையக தேசியத்தை உறுதிப்படுத்தவும் அவசர கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல தற்போது பெருந்தோட்ட நிர்வாகம் உற்பத்தியிலிருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஹெக்டேயர்காணிகளைவிளக்கி உள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலங்கள் நாட்டில் காணியற்ற மக்களுக்கு பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற காணி பகிர்ந்தளித்ததைப் போன்று மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் மலையக பூர்வீக காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு அரசுக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

அத்தோடு, தெற்கு மாவட்டங்களில் பாதுகாப்பற்று தமது அடையாளத்தை இழந்து பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மலையக மக்களை மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப குடியேற்றத்தை ஏற்படுத்த பலமான திட்டத்தை வகுக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் அடையாளம் மட்டுமல்ல மலையக சமூகமே பேரழிவையே சந்திக்கும். அதை தடுக்க எவராலும் முடியாது போய்விடும். தற்போது மலையக பெருந்தோட்ட சமூகத்துக்கு 10 பேர்ச் காணி கொடுக்கப்படும் எனும் கதை உலாவுகின்றது. இது வாழ்வதற்கான காரணியாகவே அமையவேண்டும். பொருளாதார மேம்பாட்டுக்கான மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலமே நிலத்துடன் வாழ்வை, நாட்டின் பிரஜைகளுக்கான கௌரவத்தை பெற்றுக் கொடுக்க முடியும். தற்போதைய 10 பேர்ச் காணி அறிவித்தல் தேர்தல் கால அல்லது அரசியல் வாக்குறுதியாக அமைந்து மக்களை சிக்க வைக்கும் வாக்குறுதியாக அமைந்துவிடக் கூடாது. அதற்காக காணி அளவீடும், மக்களிடமிருந்து விண்ணப்பங்களும் பெறப்பட்டு காணி கச்சேரி ஊடாக காணி பகிர்தளிக்கப்படல் வேண்டும். அதுவே நம்பிக்கையானதாக அமையும்.

எனவே, மலையகக் கட்சிகள் அடுத்த தேர்தலில் எந்த பேரினவாத காட்சிகளோடு கூட்டணி அமைக்கலாம், எத்தகைய அமைச்சு பதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம், எவ்வாறு சலுகைகளைத் தமதாக்கலாம் என சிந்திப்பதை தவிர்த்து மலையக மக்களின் இருப்பு மற்றும் அடையாளங்களைத் தக்க வைத்து அவர்களின் அரசியல் எதிர் காலம் கருதி மக்கள் அரசியலை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றுள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மலையகப் பிரச்சினையும் இனி ஐ.நாவில் ஒலிக்கும்!

## இலங்கைக்கான பிரதிநிதி உறுதி





ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இவ்வருட அறிக்கையில் மலையகம் பற்றி குறிப்பிடாமையை ஒரு குறைபாடாக ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க் -அந்தரே ஏற்றுக்கொண்டார். இதுஎதிர்காலத்தில்நிவர்த்திசெய்யப்படும் எனவும், இலங்கை ஐ.நா. நிகழ்ச்சி வலயத்தில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி உறுதியளித்தார்.

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இலங்கைக்கானஐ.நா. பிரதிநிதி மார்க் -அந்தரே, சமாதான சாளர ஒருங்கிணைப்பாளர் தாரக ஹெட்டியாராச்சி ஆகியோரை தமிழ் முற்போக்குக் கூட்டணியின்தலைவர்மனோ கணேசன் எம்.பி. சந்தித்தார். அவருடன் வேலுகுமார் எம்.பி. மற்றும் கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே மனோ எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில், தேசிய ஒருமைப்பாடு நல்லி ணக்க அலுவலகம், காணாமல்போனோர் அலுவலகம், உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவை இன்னமும் இழுபறியில்இருக்கின்றன. இருதரப்பிலும்குற்றங்கள்நிகழ்ந்தன என்பதை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு பிடிவாதமாக மறுக்கின்றமையே இதற்குப் பிரதான காரணம் என நான், முன்னாள் சமீபத்து தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் என்ற முறையில் சொன்னதை ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க்-அந்தரே அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார்.

15 இலட்சம் மலையகத் தமிழர் மத்தியில் சுமார் ஏழரை இலட்சம் பேர் இன்னும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களில் ஒன்றரை இலட்சம் பேர் தோட்டத் தொழிலாளர்கள். இந்தப் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற மக்களே இலங்கை சமூகபொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின் தங்கியவர்கள் என்ற தரவுகளுடனான ஆவணத்தை எழுத்து மூலமாக ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க் -அந்தரேக்கு நாம் வழங்கினோம். இலங்கை ஐ.நா. நிகழ்ச்சி வலயத்தில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி உறுதியளித்தார். -என்றார்.

## மனைவியும் மகனும் நாடு திரும்பவில்லை ஜப்பானிய தந்தை பொலிஸில் முறைப்பாடு

இலங்கைக்கு சென்ற தனது மனைவியும் மகனும் மீண்டும் ஜப்பானுக்கு திரும்பவில்லை என ஜப்பானிய தந்தை ஒருவர் இலங்கை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலங்கையை சேர்ந்த தனது னைவியும் மகனும் ஜப்பானில் வசித்து வருகின்றனப் எனவும் அவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இலங்கைக்கு சென்ற நிலையில் தற்போது வரையில் அவர்கள் நாடு திரும்பவில்லை என தந்தை முறைப்பாடளித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஜப்பானியரால் மின்னஞ்சல் மூலம் முறைப்பாடு அனுப்பப்பட்டுள்ளதுடன் இந்த முறைப்பாடு சுற்றுலா பொலிஸாருக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் இருவரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதி ஜப்பானுக்கு திரும்பவேண்டியவர்கள் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சம்பவம் தொடர்பில் தற்போதுசுற்றுலாபொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

## மன்னாரில் சாதனை படைத்த மாணவர்களுக்கு கௌரவிப்பு







மன்னாரில் இவ்வாண்டு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களையும் உயர் தர பரீட்சையில் சாதனைபடைத்த மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எம்.கதிர்காமநாதன், சமூக சேவையாளர் யதீஸ், சர்வமதத் தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வெற்றிபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப் பட்டதோடு,அவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரம் உண்மைகள் வெளிக்கொணரப்படுதல் வேண்டும்

## தவறின் மக்கள் போராட்டம் வெடிக்கும் என ரவிகரன் எச்சரிக்கை

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி முழுமையாக அகழ்ந்து, ஆய்வுசெய்யப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டுமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு உண்மைகள் வெளிக்கொணரத் தவறினால் மக்கள் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய்மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் ஒன்பதுநாள்கள் இடம்பெற்ற நிலையில், வெள்ளிக்கிழமை தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்நிலையில் ஒக்ரோபர் மாத மூன்றாவது வாரத்தில் அகழ்வாய்வுகள் மீளவும் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் கடந்த ஒன்பது நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவந்தநிலையில், 17 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், இன்னும் பல மனித எலும்புக்கூடுகள் அங்கே இருப் பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந் நிலையில் ஒன்பது நாள்கள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றதையடுத்து, குறித்த அகழ்வாய்வுப் பணிகள் இடைநிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதப்புதைகுழியை ஆய்வுசெய்த தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர், ஏற்கனவே திட்டமிட்டிருந்த வேறு பணிக்காக செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் இந்த மனிதப்



புதைகுழி முற்று முழுதாக அகழ்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத் தன்மை வெளிவரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

அத்தோடுசர்வதேசநாடுகள் இந்த மனிதப் புதைகுழி தொடர்பான விடயத்தில் தலையிட்டு, இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தில் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

குறிப்பாகதற்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் இறுதிக் கட்டப்போர் இடம்பெற்றபோது இராணுவத்திடம்சரணடைந்து, தற்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களாகத் தேடப்படுபவர்கள், குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என இங்குள்ள பலருக்கும் சந்தேகங்கள் இருக்கின்றன.

இப்படியான சூழலில் இங்கு அகழ்வாய்வு மேற்கொள்பவர்களை நாம் நம்புகின்றோம்.

இந்த அகழ்வாய்வுகளில் உண்மைகள் வெளிக்கொணரப் படவேண்டும்.

அவ்வாறு உண்மைகள் வெளிக்கொணரத் தவறும் பட்சத்தில் மக்கள் திரண்டு போராட்டங்களை நடத்தவேண்டிய சூழல் ஏற்படும் - என்றார். (05)

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டி - கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவிலுள்ள மெனிக்கும்புர பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தரே இந்தக் கொலையைச் செய்துள்ளார்.

வெட்டுக் காயங்களுக்குள்ளான நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை எனக் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர் பேராதனை, முருதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் எனவும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கூரிய ஆயுதத்துடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகத்தில் இலங்கை தமிழர்களுக்காக கட்டப்பட்டுள்ள ரூ.80 கோடி மதிப்பிலான 1,591 குடியிருப்பு இன்று திறப்பு

தமிழகத்தில் 13 மாவட்டங்களில் இலங்கை தமிழர்களுக்காக ரூ.79.70 கோடிமதிப்பில்கட்டிமுடிக்கப்பட்டுள்ள 1,591 குடியிருப்புகளை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டா லின் வேலூரில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் விழாவில் பங்கேற்று, காணொலி வாயிலாக திறந்துவைக்கிறார். தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் மறு வாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்காக அரசு சார்பில் வீடு கட்டும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் கடந்த 2021 ஆம் ஆண்டு வேலூரில் தொடங்கிவைத்தார். ரூ.142.16 கோடியில் 3,510 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டது. தற்போது 13 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 1,591 குடியிருப்புகள் திறப்பு விழா வேலூரில் இன்று நடைபெற உள்ளது.

வேலூர் அடுத்த மேல் மொணவூரில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் நடைபெறும் நிகழ்ச்சியில், வீடுகளை பயனாளிகளிடம் முதல்வர் ஸ்டாலின் ஒப்படைக்க உள்ளார். மேலும், காணொலி வாயிலாக 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் முகாம்களில் வீடுகள் ஒப்படைக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.79.70 கோடி மதிப்பில் 1,591 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வேலூர் மாவட்டத்தில் மட்டும் ரூ.11 கோடியில் 220 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (05)




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
World Vision
SMILEzone
CCH
Sustainability Partner
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
காலைக்கதிர்
Kalaikkathir
BirdFather
More Social More Business
ஒழுங்கமைப்பாளர்
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

# புற்றுநோய்க்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு; அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

புற்றுநோய் மருந்துகள் நிறைவடைந்துள்ளநிலையில் அதற்கான விலைமனுக்கோரலை சுகாதார அமைச்சு திடீரென நிராகரித்துவிட்டதாகஅரசமருத்துவஅதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ருக்சான் பெல்லன -

ஐம்பதிற்கும் அதிகமான புற்றுநோய்க்கான மருந்துகள் நிறைவடைந்துள்ளன.

சீக்கிரமாக புற்றுநோய்க்கான மருந்துகளை கொள்வனவு செய்யுமாறு சுகாதார அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்த போதிலும் வியாழக்கிழமை முன்வைக்கப்படவிருந்த விலைமனுக்கோரலை முன்வைக்காமல் அதனைமுடிநிராகரித்துவிட்டார்கள்.

சரியான விடயங்களை செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரம்இருக்கின்றது. ஆனால்அமைச்சர் அதிகாரிகள் கூறும் விதத்திலும் மருந்துநிறுவனங்கள்கூறும்விதத்திலும் செயற்படுகின்றார்.

இவர்கள் செய்த இந்த வேலையால் அரச மருத்துவ அதிகாரிகள் திருட்டுதனமான செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளின் கட்டளை படி செயற்பட நேரிடுகின்றது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## கட்டுமானத்துறையில் பெரும் வீழ்ச்சி சீமெந்து விலை குறைக்கப்படுமா?

நாட்டில் கட்டுமானத்துறை 57 வீத சரிவை கண்டுள்ளது எனவும் ஆனால் தற்போது கட்டுமானப்பணிகளுக்கான மூலப்பொருள்கள் அதிகமான இலாபம் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன எனவும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தேசியஒருங்கிணைப்பாளர்சுமேத ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், 50 கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பை 2150.00 ரூபாவிற்கே விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் பல்வேறு ஆய்வுகளின் பின்னர் 50 கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பையை 1850.00 ரூபாவிற்கு விற்க முடியும் என கண்டறிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்இதன்மூலம்தற்போது வரையில் 300.00 ரூபா இலாபம் ஈட்டப்படுகின்றது என்பதையும் அறிந்துகொள்ளமுடிந்ததுஎன்றும் அரசால் அறவிடப்படும் வரியை நீக்கினால் 50 கிலோ கிராம் சீமெந்தை 1,000.00 ரூபாவிற்கு விற்பனைசெய்யமுடியும்என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரியை முழுமையாக நீக்கு மாறு அராங்கத்திடம் கோரவில்லைஎன்றும்அரசாங்கம் சீமெந்து பைக்கு 50 வீத வரியை அறவிடுகின்றது ஆகவே வரி அறவிடும் வீதத்தை குறைத்தால் சீமெந்துக்கான விலையை இன்னும் குறைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (05)

## யாழில் ஒரு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் முதியவர் கைது

### வான் ஒன்றும் சிக்கியது

யாழ்ப்பாணத்தில் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் 70 வயது முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட முதியவரிடம் இருந்து ஒரு கிலோ கிராம் 40 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முதியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ஈஸ்டர் தாக்குதலில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் சர்வதேச விசாரணைக்கான சாத்தியம் குறித்து ஆராய்வு

### அமெரிக்க இராஜாங்க திணைக்களத் தூதுவர் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் இந்த விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து தாம் ஆராய்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடருக்கு முன்பதாக உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக ஜெனிவா சென்றிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனைத்தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றார்.

அதன்படி வியாழக்கிழமை வரை வொஷிங்டனில் தங்கியிருந்த அவர், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல்நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக், அமெரிக்கத்திறைசேரிஅதிகாரிகள், சர்வதேசஅபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.




குறிப்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது, அண்மையில் சனல்-4 செய்திச்சேவையால் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆவணப்படம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த ஆவணப்படத்தின் பின்னணி மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மை, உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டிருப்பதால் இதனை சர்வதேச குற்றமாகக் கருதி சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சனல்-4 வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில்அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ள ஹன்ஸீர் அஸாத் மௌலானா, இதுபற்றிஐக்கியநாடுகள்சபையில் ஏற்கனவே சாட்சியமளித்துள்ள நிலையில் அதனைப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதுபற்றிக்கருத்துவெளியிட்ட பெத் வான் ஸ்காக், உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் இவ்விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் உண்டு எனவும், இது தொடர்பில் தாம் ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளார். (05)

## மூன்றெழுத்துக்காரரே ஜனாதிபதி வேட்பாளர்

### மொட்டுக் கட்சி அறிவிப்பு

மூன்றெழுத்துடையவரேஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்றும், இன்னும் ஒன்றரை மாதமளவில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்ககூடியதாக இருக்கும் என்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

மொட்டுக்கட்சிதலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தங்கத்துக்கு ஏன் அதிக விலை? மாணிக்கம், முத்துக்களுக்கு ஏன் மதிப்பு? அவை வீதியில் கொட்டிக் கிடந்தால் கருங்கல்லுக்குரிய மதிப்பே கிட்டும். எனவே, மொட்டுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரும் பெறுமதி மிக்கவர், பதற்றப்பட வேண்டாம், உரிய நேரத்தில் அறிவிப்புவரும்.

அரசியலில் 'நிராகரிப்பு' என்பது நிரந்தரம் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணம் இதற்கு சிறந்த சான்று. - என்றார்.

## ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை மீறுபவர்கள் இலகுவில் தப்பித்துக்கொள்ள முடியாது

### நீதி அமைச்சர் விஜயதாஸ எச்சரிக்கை

ஊழல் எதிர்ப்பு சட்டத்தை மீறுபவர்களுக்கு இலகுவில் தப்பித்துக்கொள்ள முடியாமல் கடுமையான தண்டனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் ஊழல் அற்ற நாட்டை ஏற்படுத்த இந்த சட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித் தார். 2023-09-15ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் ஊழல் எதிர்ப்பு சட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடு கையில் –

இலஞ்சம், ஊழல் மோசடியற்ற நாடொன்றை ஏற்படுத்துவதாக இருந்தால் அமுலுக்கு வரும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை யதார்த்தமாக்கிக்கொள்ளவேண்டும்.

இந்த சட்ட வரைபுக்குள் அதற்கு தேவையான அனைத்து விடயங்களும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. ஊழல் எதிர்ப்பு சட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு அரசியல்வாதிகள்,அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன் இந்த ஊழல் எதிர்ப்பு சட்டம் நாட்டு மக்கள் பல நூற்றாண்டுகளாக எதிர்பார்த்திருந்த கனவாகும். அதனால் இந்த சட்டத்தை முறையாக செயற்படுத்தி மக்களின் கனவை நனவாக்க அனைத்து தரப்பினரும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நாங்கள் நம்புகிறோம். மேலும்அரசதுறைகளில்குறிப்பாக அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் அரச வளங்களை துஷ்பிரயேகம் செய்தல் ஊழல் மோசடி மற்றும் இலஞ்சம் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளால் நாட்டின் பொரு ளாதாரத்துக்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என நீண்டதொரு கருத்தாடல் இருந்து வருகிறது.

அனைத்து தேர்தல்களின்போதும் அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் கட்சிகளுக்கு மக்கள் வாக்களித்திருப்பது, இந்த இலஞ்ச ஊழல் மோசடிகளை ஒழிப்பதாக வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலாகும்.

என்றாலும் மக்கள் திருப்தியடையும் வகையில் இந்த இலஞ்ச ஊழலை தடுப்பதற்கு ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கத்துக்கும் முடியுமாகவில்லை.

அதற்குத் தேவையான சட்ட வரைவும் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை. அதேபோன்று இதனை செயற்படுத்தும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளும் இதன் தேவைப்பாடு குறித்து கண்டு கொள்ளவில்லை.

அதனால் அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் நாங்கள் கைச்சாத்திட்ட நாடாக இருந்தாலும் அதற்கு ஏற்புடைய சட்ட திட்டங்களை நாங்கள் அமைக்கவில்லை. மேலும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் இதனை செயற்படுத்தும் நிறுவனங்களை பலப்படுத்துவதற்காகவே 21 ஆம் அரசமைப்பு திருத்தம் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களை ஆரம்பித்தோம். அதற்குள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் உள்ளடக்கப்படுகிறது.

என்றாலும் அதன் செயற்பாடுகள் மற்றும் சுயாதீனத்தன்மை தொடர்பாக நாட்டு மக்கள் திருப்தியடையவில்லை. அதனால் நாங்கள் நிதி, நிர்வாக அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுத்தோம். அதன் பிரகாரமே ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் அனுமதித்துக்கொள்ளப்பட்டது. ஏற்கனவே இருந்த சட்டத்திலும் பார்க்க நிறுவனத்தின் சுயாதீனத்தன்மை இதன் மூலம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் சட்டத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டன. அதனால் நாங்கள் புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அனுமதித்துக்கொண்டோம்.. இந்த சட்டமும் இன்று முதல் அமுலுக்கு வருகிறது. ஊழல் எதிர்ப்பு சட்டத்தை மீறுபவர்களுக்கு இலகுவில் தப்பித்துக்கொள்ள முடியாமல் கடுமையான தண்டனைகள் இந்த சட்டத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. – என்றார். (05)

## கண்டியில் நடந்தது 'மாதிரித் தேர்தல்'

*கண்டியில் நடைபெற்ற மாதிரி தேர்தலில் 90.59 வீதமானோர் விரைவாக தேர்தலொன்றைக் கோரியுள்ளனர். 51.83 வீதமானோர் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலை விரைவாக கோரியுள்ளனர்.*

*ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் மற்றும் இளைஞர் அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து சர்வதேச ஜனநாயக தினத்தை கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்த மாதிரி தேர்தல் வெள்ளிக்கிழமை கண்டி நகர மத்திய வர்த்தக சந்தை கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.*

*கபே அமைப்பு, தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம், ஆகிய தேர்தல் கண்காணிப்பு நிலையங்களினது பிரதானிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இம்மாதிரி தேர்தலில் கண்டி மாவட்ட மக்களுக்கு தேர்தல் தொடர்பான அபிப்பிராயங்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.*

*அதன்படி, 742 வாக்காளர்கள் வாக்குகளை பதிவு செய்ததுடன், 92.59 வீதமானோர் விரைவாக தேர்தலொன்று அவசியம் என தெரிவித்துள்ளதுடன், அதில் 26.54 வீதமானோர் ஜனாதிபதி தேர்தல் அவசியம் எனவும், நடைபெற்ற இந்த மாதிரித் தேர்தலின் ஒட்டுமொத்த தேர்தல் முடிவுகளின்படி, 9.41 வீதமானோர் தேர்தல் அவசியமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.*

*ஜனநாயக இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டாளர் கே.அர்ஜுன இதன்போது கருத்து தெரிவிக்கையில் -*

*தேர்தல் தொடர்பில் மக்களுக்கு உள்ள ஆர்வத்தை வெளிக்கொணர்ந்ததுடன் 'தேர்தல் வேண்டாம்' என குறிப்பிடும் ஒரு சிலர் 'வேண்டாம்' என குறிப்பிடுவதற்கான காரணம் தேர்தல் தொடர்பான வெறுப்பை, ஊழல் வாய்ந்த அரசியல்வாதிகள் தொடர்பானவெறுப்பையே அது புலப்படுத்துவதாகத் தெரிவித்தார்.*

*மேலும், கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ், தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மத்தியநிலையத்தின்பிரதானி டி.எம்.திசாநாயக்க ஆகியோர் விரைவில் தேர்தலொன்றை நடாத்துவதற்கான வாய்ப்பை விரைவாக உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினர் மேற்கொண்டு ஜனநாயகத்தினை பாதுகாக்க செயற்பட வேண்டும் என அவதானத்தைத் தெரிவித்தனர். (05)*

# திலீபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தியை மறித்து அக்கரைப்பற்றில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்







தமிழ்த்தேசியமக்கள்முன்னணி தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பொத்து விலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஆரம்பிக்கப்பட்ட தீலிபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தியை அக்கரைப்பற்றுப் பகுதியில் வைத்து மறித்த சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வெள்ளிக்கிழமை மாலை குறித்த வாகன ஊர்தி இடம் பெற்றபோதே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தல் தினத்தையிட்டு 15 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரையில் திலீபன் வாரத்தையிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் பொத்துவில் இருந்து யாழ். நல்லூர் திலீபன் பூங்கா வரையிலான அவரின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பொத்துவில் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலில் வண பிதா சக்திவேல், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன். கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டு திலீபனின் உருவப்படத்தின் முன்னாள் ஈகை சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி வாகன ஊர்தியை ஆரத்பித்து வைத்தனர்.

பொத்துவில் இருந்து திருக் கோவில் வரையுள்ள கோமாரி, ஊறணி, சங்கமம்கண்டி திருக்கோவில் வரையும் வீதிகளில் வாகன ஊர்திக்காக காத்திருந்த மக்கள் அதனை வீதிகளில் மறித்து திரு உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து கல்முனையை நோக்கி அக்கரைப்பற்றின் ஊடாக மாலை 5 மணியளவில் பயணித்து வாகன ஊர்தியை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகில் திடீரென 7 பேர் கொண்ட ஒரு குழுவினர் இலங்கையின் தேசியக் கொடியுடன், புலிகளின் மிருகத்தனமான சித்தாந்தங்களை எமது கிழக்கு மாகாண அமைதியான சமூகத்துக்கு பிரசாரம் செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று குரல் எழுப்பியபடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் சமூகத்துக்கு எதிரான புலிகளின் கொடூர கொலைகளை வன்மையாக கண்டிக்கின்றோம், அக்கரைப்பற்று முஸ்லீம்களுக்கு எதிராக புலிகள் நடத்திய அட்டூழிங்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு சர்வதேசத்தையும் யு.என்.எச்.சி.ஆரையும் வலியுறுத்துகின்றோம் என சுலோகங்கள் ஏந்தியவாறும் கோங்கள் எழுப்பியவாறும் அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களுடன் சுமார் 5 நிமிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.


இதனையடுத்து அங்கு வாகன நெரிசல் ஏற்பட்ட நிலையில் வாகன ஊர்தி அங்கு ஓரிரு நிமிடம் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் மாற்று வீதியால் வாகன ஊர்தி பயணித்து கல்முனை பாண்டிருப்பை சென்றடைந்தது.

அங்கு வீதியில் ஊர்திக்காக காத்திருந்த மக்கள் ஊர்தியை மறித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தியதையடுத்து அம்பாறை மாவட்ட ஊர்தி பவனி நிறைவுக்கு வந்திருந்தது. சனிக்கிழமை இரண்டம் நாள் களுவாஞ்சிக்குடியில் வாகன ஊர்தி ஆரம்பித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேசங்களுக்கு சென்று அங்கிருந்து வாகரை ஊடாக திருகோணமலையை சென்றடைந்தது.

(05)

## தாவடியில் உள்ள வீடு மீது பெற்றோல் குண்டு வீச்சு

### காதல் விவகாரமே காரணம் என்கிறது பொலிஸ்



யாழ்ப்பாணத்தில் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதில், வீட்டில் இருந்த யுவதி உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்கள் ஐவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாவடி பகுதியில் உள்ள வீடொன்றின் மீது சனிக்கிழமை பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதுடன், வீட்டின் ஜன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் அடித்து உடைத்து, வீட்டில் இருந்தவர்கள் மீதும் இளைஞன் ஒருவரின் தலைமையில் வந்த கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவத்தில் வீட்டில் இருந்த யுவதி ஒருவர் உள்ளிட்ட ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் பகுதியில் உள்ள இளைஞன் ஒருவரின் தலைமையில் வந்த கும்பலே தாக்குதல் மேற்கொண்டதாகவும், காதல் விவகாரமே தாக்குதலுக்குக் காரணம் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதல் மேற்கொண்ட இளைஞனை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவரையும், அவருடன் , தாக்குதலுக்கு வந்த ஏனையவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் , மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## அழுகிய ஆணின் சடலம் புதுக்குடியிருப்பில் மீட்பு



புதுக்குடியிருப்பு பகுதியில் அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் வசிக்கும் நபரொருவர் கடந்த புதன்கிழமை காணாமல் போயிருந்தார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் தென்னம் காணியொன்றில் இருந்து துர்நாற்றம் வீசியமையால் கிராமவாசியொருவர் சென்று பார்த்தவேளை அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் காணப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் சுதர்சனுடைய சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.கெங்காதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி சுபுண் ஏக்கநாயக்க மற்றும் கிராம சேவையாளர் வே.மேகானந்தசிவம் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டுள்ளதுடன் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

தற்போது சடலம் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சடலத்திற்கு அருகே பாட்டா ஒன்றும் அண்மித்த பகுதியில் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் கட்டுநாயக்கவில் கைது

### 17 லட்சம் ரூபா பெறுமதியானவையாம்



சட்ட விரோதமான முறையில் வெளிநாட்டு சிகரெட்டுக்களை நாட்டுக்கு கடத்த முற்பட்ட பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெள்ளிக்கிழமை இரவு போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து வந்த பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 17 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

புத்தளம் பிரதேசத்தில் வசிக்கும் 51 வயதான குறித்த பெண் அடிக்கடி விமானம் மூலம் பொருள்களைக் கொண்டுவந்து இலங்கையில் விற்பனை செய்து வருபவர் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. 17 ஆயிரம் சிகரெட்டுக்கள் அடங்கிய 85 காட்டுன்கள் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தபோது, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பல்கலை அனுமதி படிவம் நிரப்ப கருத்தரங்கு



சிறகுகள் அமையம் - தமிழர் கல்வி மதியுரையகத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக அனுமதி படிவங்கள் நிரப்புவதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று மாலை 7:30 மணிக்கு இணைய வழியில் இடம்பெற உள்ளது. குறித்த கருத்தமர்வில் வளவாளராக வழிகாட்டல் ஆலோசகர் த. பிறவுண்சன் கலந்து கொள்ளவுள்ளார்

## மு.கா. தலைவர் அஸ்ரப்பின் நினைவு சாய்ந்தமருதில் நேற்று அனுஸ்டிப்பு

(பாறுக் ஷிஹான்)



சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த மர்ஹூம் எம்.எச்.எம் அஸ்ரப்பின் 23 ஆவது நினைவு தினம் நேற்று சம்மாந்துறையில் அமைந்துள்ள ஈ.சி.எம் நிறுவனத்தில் நடைபெற்றது.

நபீர்பௌண்டேசன் ஸ்தாபகரும் சமூக சேவகருமான பொறியியலாளர் உதுமான்கண்டு நபீர் ஏற்பாட்டில் நடைபெற்றதுடன் கிராஅத் நிகழ்வினை மௌலவி ஏ.சி சுபைர் ஹாமி மேற்கொண்டார். வரவேற்புரை சட்டத்தரணி நவாஸ் மேற்கொண்டதுடன் சம்மாந்துறை உலமா சபையின் கண்ணியமிக்க உலமாக்களால் கத்தமுல் குர்ஆன் நிகழ்வு நடைபெற்றது.

அத்துடன் சிறப்புரையை சம்மாந்துறை ஜெலில் மௌலவி மேற்கொண்டதுடன் பிரதான உரையினை சபா முஹம்மது நஜாஹியும் வழங்கினார். தொடர்ந்து நன்றியுரையினை ஆசிரியர் ஏ.எல்.நயீம் மேற்கொண்டார். நிகழ்வின் இறுதியாக மூன்று மௌலவிமார்கள் கௌரவிப்பும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சம்மாந்துறை மைந்தன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ அன்வர் இஸ்மாயில் மறைந்து 16 வருடங்கள் நிறை வடைவதை தொடர்ந்தும் அங்கு கத்தமுல் குர்ஆன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2023இல் வெளியிடப்பெற்றது.